# வியாபார நிறுவனங்களை சுவீகரிக்க மசோதா!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 258
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 10 ஷஃபான் 25 செவ்வாய்க்கிழமை (27-10-70)

தீபாவளி
மலிவு விற்பனை
உங்கள் குழந்தைகளுக்குத்
தேவையான எல்லாவிதமான
றெடிமேட்
உடுப்புகளும் சேட்
வகைகளும் எம்மிடமுண்டு
இன்றே விஜயஞ்செய்யுங்கள்
கணேசானந்தாஸ்
(முட்டாசுக்கடை சந்தி)
208 கே.கே.எஸ்.றேட் யாழ்ப்பாணம்

எமது தீபாவளி
மலிவு விற்பனை
15 முதல் 28 வரை
தீபாவளி பண்டிகையை
சிறப்புடன் கொண்டாட
தரமான ஜவுளிகளைத்
தெரிவு செய்ய
ராஜ்கோபால்ஸ்
[பிரபல ஜவுளி மாளிகை]
36/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## என். எம். சமர்ப்பித்தார்

கொழும்பு, திங்கள்
வியாபார நிறுவனங்களை சுவீகரிப்பது சம்பந்தமான மசோதா ஒன்றை நிதிஅமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா இன்று ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்தார்.



வியாபார நிறுவனமொன்றை அரசு தேவை என்று கருதும் பட்சத்தில் சுவீகரித்துக்கொள்வதற்கு இம் மசோதா வழிசெய்கிறது.

வியாபார நிறுவனமொன்றை அரசு தேவை என்று கருதும்பட்சத்தில் அவர்களுடன் செய்து கொண்ட ஒரு ஒப்பந்தத்தின் பேரிலோ, அன்றி கட்டாயத்தின் பேரிலோ பொறுப்பேற்றுக்கொள்வதற்கு இம் மசோதா இடமளிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சிமன்றத்தில் விவாதம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

# வங்கிகளில் பலத்த பந்தோபஸ்து!
# மோசடி செய்வோருக்குச் சிறை!!

## தனியாக இயங்க ஆவன செய்க

கொழும்பு, திங்கள்
அரசகரும மொழித் திணைக்களத்தின் கீழ் இருக்கும் தமிழ் ஆராய்ச்சிப் பகுதி, சிங்கள அதிகாரியின் கீழ் பொது நிர்வாக திணைக்களத்தில் கொண்டுவரப்படுவதை அரசகரும மொழித் திணைக்களத் தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஆராய்ச்சி உதவியாளர் சங்கம் ஆட்சேபித்து மகஜர் ஒன்றை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அம்மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:

அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர் மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகள் காரணமாக சொல்லகராதிகளைப் புதுப்பிப்பது நிறுத்தப்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது. ஒரு சிங்கள அதிகாரியின் தலைமையில் தமிழ் ஆராய்ச்சிப் பகுதியை மாற்றுவது மேற்குறித்த அச்சத்திற்குரியது மட்டுமன்றி ஆராய்ச்சி உதவியாளர்களின் தொழில் வாய்ப்பையும் இழக்கச் செய்துவிடும். சொல்லகராதிக் குழுவின் தலைவராக இருப்பதோடு உதவி ஆணையாளராகவும் இருந்து தமிழ் ஆராய்ச்சிப் பகுதிக்கு வழிகாட்ட வேண்டியிருக்கிறது. பொதுநிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டமைச்சுக்கு மாற்றப்பட்ட தமிழ்ப்பகுதி உதவி ஆணையாளரையோ அல்லது அந்த இடத்திற்கு மாற்றப்பட இருப்பவரையோ கலந்தாலோசியாமல் இவ்விடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதிக்குப் பொறுப்பான உதவி ஆணையாளர் இல்லாமல் இருக்கும் பொழுது இவ்வித செயல் நடைபெற்றிருக்கிறது.

தமிழ் ஆராய்ச்சிப் பகுதி தனியாகத் தொடர்ந்தும் இயங்க வேண்டிய நடவடிக்கைகளைமேற் கொள்ளுமாறும் தங்களை கேட்டுக் கொள்கின்றோம்.

## தங்கத்தின் விலை திடீர் ஏற்றம்

கொழும்பு, திங்கள்
நிதி அமைச்சரின் புதிய வரவு செலவுத்திட்ட யோசனைகளைத்தொடர்ந்து கொழும்புமார்க்கட்டில் தங்கத்தின் விலை திடீரென ஏற்றம் கண்டுளளது.

**தங்கப்பவுண் 140ரூபாவிலிருந்து 180ரூபாய்க்கு விற்பனையாகிக்கொண்டிருந்தது**

கரன்ஸிநோட்டுக்களைத்தங்கப்பவுணுகமாற்றிக் கொள்வதற்கு அனேகர் முயற்சி செய்வதே இந்த விலையேற்றத்துக்குக்காரணம் என்று கூறப்படுகின்றது,

கடைகளில் எவரும் பழைய நூறுரூபாய் நோட்டுகளையும், 50 ரூபாய் நோட்டுகளையும் வாங்குகிறார்களில்லை. (சி.பி.ஏ.)

## டாக்ஸி கட்டணம் உயராது

## 3-ம் திகதிவரை 100, 50 ரூபா நோட்டுக்களை மாற்ற ஏற்பாடு

— நமது கொழும்பு நிருபர் பெரி. சுந்தரலிங்கம் —

நாளைமுதல் 3-ம் திகதிவரை தற்போது புழக்கத்திலுள்ள 100 ரூபா 50ரூபா நோட்டுக்களுக்கு பதிலாக முழுப் பெறுமதியுள்ள புதிய நோட்டுக்களை நாட்டிலுள்ள சகல வங்கிகளிலும் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சகல வங்கிகளிலும் பலத்த ராணுவ கடற்படை பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

வங்கிகளில் மாலை 4 30 மணிவரை பணம் மாற்றிக் கொடுப்பதற்கான விசேடஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்தத் தகவல்களை நிதி அமைச்சர் டாக்டர் என். எம், பெரேரா நேற்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

பழைய 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்களை மாற்றிக்கொள்வதில் ஏற்படும் கஷ்டங்களை தங்கள் பகுதி காரியாதிகாரிகளிடம் தெரிவித்துக்கொள்ளலாம். தெரிவிக்கப்படும் புகார்கள் [illegible]த்து உடன் நடவடிக்கை எடுககப்படு[illegible]வும் அறிவிக்கப்படுகிறது.

பணத்தை மாற்றிக்கொள்ளத் தவறுன உறுதிமொழிகளை அளிப்பவர்கள் கடுமையான சிறைத்தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று [illegible]

வங்கிகளில் பணம் மாற்றுகள் நடைபெறும். பிற்றிக்கொள்ளும்போது. பகல் 2 மணியிலிருந்து தம்மை [illegible] 4-30 மணிவரை கொள்ள [illegible] 100 ரூபா, 50 ரூபா நோட் அத்[illegible]ட்சிப்பத்தி[illegible]த்தை டுக்கள் மாற்றிக்கொ[illegible]

## புழக்கத்தில் உள்ள நோட்டுகள்

கொழும்பு. திங்கள்
நாற்பத்திமூன்று கோடி அறுபது லட்சம் (4036,000,000) ரூபாய்க்கான நூறு ரூபாய் நோட்டுக்களும். முப்பத்தாறு கோடி (360 000,000) ரூபாய்க்கான ஐம்பது ரூபாய் நோட்டுக்களும் தற்போது புழக்கத்தில் உள்ளன. (சி பி ஏ)

## அரிசி ஆலைகளை அரசு எடுக்காதது ஏமாற்றம் என்கிறார் யாழ்.மேயர்

யாழ்ப்பாணம், திங்கள் [illegible] அளவும் உயரவில்லை. சிகரவோா சங்கத்தலைவர் திரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதே இந்த விலையேற்றத்துக்குக்காரணம் என்று கூறப்படுகின்றது.

களையும் வாங்குகிறார்களில்லை. (பி.ப.ஏ.)

வும் அறிவிக்கப்படுகிறது.

## டாக்ஸி கட்டணம் உயராது

கோட்டை, திங்கள்

டாக்ஸிக் கட்டணம் உயர்த்தப்படமாட்டாது என மோட்டார் ஆணையாளர்கள் இலாகா இன்று அறிவித்துள்ளது.

டாக்ஸிச் சொந்தக்காரர்களே பெற்ரோல் விலை அதிகரிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கட்டணத்தையுயர்த்தக் கூடாது எனவும் மேற்படி இலாகா அதன் அறிவித்தலில் மேலும் குறிப்பிட்டுள்ளது

(பி.ப.ஏ.)

## 'சமுதாய மாற்றத்திற்கேற்ப கல்வி அமைப்பு வேண்டும்'

### மாணவர் சங்க விருந்தில் திரு. சத்தியேந்திரா

மாவிட்டபுரம், திங்கள்

'நான் பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் படிக்கும்போது நான்கு விஞ்ஞானப் பாடங்களைப் படித்தேன். என்னுடைய தகப்பனார் கல்வி பயிலும்போதும் இந்தப் பாடங்களையே படித்தார். என்னுடைய பிள்ளைகள் கல்விபயிலும்போதுங் கூட இந்தப்பாடங்களைப்படிக்கவேண்டிய நிலையிருந்தாலும் இருக்கும். இந்நிலை மாறவேண்டும். சமுதாயத்திலே ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு அமைய பாடத்திட்டங்கள் இருப்பதே விரும்பத்தக்கது'

இவ்வாறு திரு. என். சதியேந்திரா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் உயர்தர மாணவர் சங்கத்தின் 13-வது வருடாந்த விருந்து வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம், பொறியியலாளர் திரு. ஆர். இ. தம்பிரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர்.

பணத்தை மாற்றிக்கொள்ளத் தவறுன உறுதிமொழிகளை அளிப்பவர்கள் கடுமையான சிறைத்தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று டாக்டர் என். எம். எச்சரித்துள்ளார்.

பணத்தை பதுக்கிவைத்திருக்கும் மோசடிப் பேர்வழிகளின் பதுக்கல் வெளிக்கொணர்வதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதே தவிர நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த ஏழை மக்கள் உழைத்த பணத்தை அரசு எவ்விதத்திலும் எடுத்துக்கொள்ள மாட்டாதென அமைச்சர் குறிப்பிட்டார்.

வங்கிகளில் பணம் மாற்றிக் கொள்ளும்போது, தம்மை உறுதிப்படுத்திக் கொள்ள ஏதாவது ஒரு அத்தாட்சிப்பத்திரத்தை சமர்ப்பிக்கவேண்டுமென்றும் பத்திரமொன்றில் பெயர் முகவரி எல்லாம் நிரப்பப்பட்டு பெருவிரல் அடையாளம் இடப்பட வேண்டுமென்றும் இலங்கை மத்தியவங்கி அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

3-ம் திகதிவரை வங்கிகளில் மாலை 4-30 மணிவரை 100 ரூபா 50 ரூபா நோட்டுக்கள் மாற்றிக் கொடுப்பதற்கான வேலைகள் நடைபெறும். பிற்பகல் 2 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்கள் மாற்றிக்கொடுப்பதற்கான வேலைகள் மட்டுமே நடைபெறும் வங்கிகளில் இந்த வேலைகளைக் கவனிப்பதற்கு மேலதிக ஆட்கள் தேவைப்பட்டால் கச்சேரி ஊழியர்கள் அமர்த்தப்படுவார்கள் என்று நேற்று ஆட்சிமன்றத்தில் பொதுநிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயகா தெரிவித்தார்.

### டாக்டர் என். எம். சொல்கிறார்:

## "32 வருடகால வரியைக்கூட எம்மால் வசூலிக்கமுடியும்"

வரி செலுத்தாமல் மீறுவோரைத் தடைசெய்வதற்கான ஒரு மசோதாவை நிதி அமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா நேற்று ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்தார். இம்மசோதா நிறைவேற்றப்பட்டது.

பழைய 100ரூபா 50ரூபா நோட்டுக்கள் 3-ம் திகதிக்குப்பின்னர் செல்லுபடியாகாதென்ற சட்டத்தைமேற்படி சட்டம் அமுல்படுத்த வழிவகுக்கிறது.

பழைய 100 ரூபா 50 ரூபா நோட்டுக்கள் 3-ம் திகதிக்குப் பின்னர் செல்லுபடியாகாதென்று அறிவிக்கப் பட்டபோதிலும் இப்போதுள்ள நாணயச் சட்டப்படி ஒருவருடகாலத்துக்கு அவை செல்லுபடியாகுமாம் ஆனால் நிதிஅமைச்சரினால் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட வரி செலுத்தாமல் மீறுவோரைத் தடைசெய்யும் மசோதா பழைய நூறு ரூபா 50 ரூபா நோட்டுக்கள் செலலுபடியாகாதென்ற சட்டத்தை பூரணமாக அமுல் நடத்த வழி வகுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வருமானவரி செலுத்தாமல் பணத்தை பதுக்கி வைத்திருப்பவர்களிடமிருந்து 32 வருடப் பாக்கியைக்கூட எம்மால் வசூலிக்கமுடியும் ஆனால் அதனைத் தவிர்ப்பதற் ஆகவே 50 வீதப் பணத்தை அரசு எடுக்கத் தீர்மானித்துள்ளது. என்று டாக்டர் என் எம். பெரேரா இந்தமசோதாவை சமர்ப்பித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பொதுநிர்வாக அமைச்சர் திருபீலிக்ஸ் பண்டாரநாயக்கா பேசுகையில் நிதி மந்திரி டாக்டர் என், எம், பெரேரா அதிர்ச்சி வைத்தியம்ஒன்று நடத்தியிருக்கிறாரென வர்ணித்தார். இந்த அதிர்ச்சி வைத்தியத்தினுல் பல சமூக விரோத சக்திகள் குணமடைந்துவிடுவார்களென்றும் கூறினார்.

கிராமப்புற மக்கள் சுலபமாக 100 ரூபா 50 ரூபா நோட்டுக்களை மாற்றிக் கொள்வதற்காக லட்சக் கணக்கான துண்டுப்பிரசுரங்களை அரசாங்கம் மூன்று மொழிகளிலும் நாடெங்கிலும் விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளது இரு விமானங்களில் இந்தத் துண்டுப்பிரசுரங்கள் அனுப்பட்டுள்ளன. வவனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கும் இவை அனுப்பப்பட்டிருப்பதாகவும் திரு பீலிக்ஸ் தமது உரையில் குறிப்பிட்டார். கிராமசேவகர் இந்தத் துண்டுப்பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்து, மக்களின் பணம் மாற்றுவது சம்பந்தமான ஐயப்பாடுகளை நீக்குவார் என்றும் அவர் கூறினார்.

## அரிசி ஆலைகளை அரசு எடுக்காதது ஏமாற்றம் என்கிறார் யாழ்.மேயர்

யாழ்ப்பாணம், திங்கள்

மஞ்சள், கடுகு, சீரகம், சீயக்காய் போன்ற யாழ்ப்பாண மக்களின் பாவனைப் பொருள்களின் விலை குறையவில்லை, இவை தட்டுப்பாடில்லாமல் கிடைக்கக் கூடிய வழிவகைகளும் செய்யப்படவில்லை. கூட்டரசின் வரவு-செலவுத்திட்டம் அவர்களிடம் எதிர்பார்த்ததைக் கொடுக்கவில்லை. என்னதான் சொன்னாலும் சாதாரண ஏழைப் பொதுமக்கள்தான் மேலும் மேலும் பாதிக்கப்படுவார்கள்.

இவ்வாறு யாழ். நகர மேயர் திரு. சி. எஸ். துரைராசா புதிய வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை சரிக்கட்டுவதற்கு நிதி அமைச்சர் தெரிவித்துள்ள யோசனைகள் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில் கூறினார்.

சிகரட்டின் விலை வருடா வருடம் அதிகரிக்கப்படுகிறதேயொழிய அதன் தரமும் அளவும் உயரவில்லை. சிகரட்டின் விலை உயர உயர அதன் நீளமும், தரமும் குறைந்துகொண்டே போகிறது என்றும் மேயர் தெரிவித்தார்.

அரிசி ஆலைகளை அரசாங்கம் எடுக்கப் போவதாகச் செய்திகள் தெரிவித்தன. மக்களும் இதை எதிர்பார்த்தனர். அரசாங்கம் அவற்றை எடுக்காதது ஏமாற்றம் தருகிறதென்றும் மேயர் கூறினார்.

பெட்ரோல் விலை உயர்வினுலும் சாதாரண பொதுமக்களே பாதிக்கப்படுவார்களென்றும் இது மார்ட்டு வண்டியில் பிரயாணம் செய்யும் காலமல்லவென்றும் மேயர்குறிப்பிட்டார்.

நிதி அமைச்சரின் புதிய நடவடிக்கைகள் வரிசெலுத்துவதில் தில்லுமுல்லுசெய்கிறவர்களுக் கெதிராகவே எடுக்கப்பட்டுள்ளனவென்று வரிகளை ஒழுங்காகசெலுத்துகிறவர்களுக்கு எதிராக வங்கிசென்று வரிசெலுத்துவோர் சங்கத்தலைவர் திரு. ஜே. எம். பெர்ணண்டோ கூறினர்.

இன்னும் மோசமாகவே நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனுல் நாங்கள் நினைத்தது போய் நிதியமைச்சரின் யோசனைகள் அவ்வளவு மோசமாக இல்லை, என்றுர் அவர்

### நியாயமான யோசனைகள்

வரவு செலவுத்திட்டமதிப்பீட்டில் காணப்பட்ட பற்ருக்குறைத் தொகையில் அதனைச் சரிக்கட்டுவதற்காக தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் பொதுவாக நியாயமானவையே என்று இலங்கை தேசிய கைத்தொழில் சோம்பம் தலைவர் எட்மன்ட் ஜே. குரே கூறினுர்.

தனியார் துறையில் குறிப்பாக தனியார் கைத்தொழில்துறைகளில் இருந்துவந்த உறுதியற்ற நிலைமையை நிதியமைச்சர் போக்கியிருக்கிறுர் என்று திரு. குரோ குறிப்பிட்டார்.

## மனைவி கொலை; கணவன் தற்கொலை

### கோண்டாவிலில் பரிதாப சம்பவம்

யாழ்ப்பாணம், செவ்.

கணவனுக்கும் மனைவிக்குமிடையிலிருந்து வந்த தகராறை சமரசமாகத்தீர்த்து வைத்து குடும்பம் ஒற்றுமையாக வாழ்வதற்குப் பொலிசார் எடுத்த நல்ல முயற்சி கூடப் பயனளிக்கவில்லை. ஒருநாள்மட்டும் தகராறில்லாமல் சந்தோஷமாக வாழ்ந்த அந்தக் கணவனும் மனைவியும் அடுத்தநாள் பிணமான சோகச் சம்பவம் கோண்டாவிலில் நேற்று நடந்தது.

கோண்டாவிலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பொன்னையா அவரது மனைவியான இராசம்மாவை வெட்டிக் கொலை செய்துவிட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டதாக இருவரின் மரண விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இராசம்மா வெட்டுக்காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் வீதியில் அவரது கணவர் பொன்னையா இறந்து கிடக்கக்காணப்பட்டார். இச்சோக நிகழ்ச்சி நேற்று முன்தினம் பிற்பகல் நடந்தது.

பொன்னையாவுக்கும் அவரதுமனைவியான இராசம்மாவுக்குமிடையில் நீண்டகாலமாகத் தகராறிருந்துவந்ததாகவும் தமது கணவர் சதகுடித்துவிட்டுவந்து தம்மை அடித்துத்துன்புறுத்துவதாக இராசம்மா சமீபத்தில் பொலிசில் புகார் செய்ததாகவும் இதைத் தொடர்ந்து கணவனையும் மனைவியையும் பொலிஸ் நிலயத்திற்கு அழைத்து இருவரும் சமாதானமாக வாழ வேண்டும் என பொலிசார் புத்தி கூறியதாகவும் தாம் இனிமது அருந்துவதில்லையென்றும் மனையுடன் அன்பாகவாழ்வதாகவும் உறுதி அளித்துவிட்டுப் பொன்னையா சென்றதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஒருநாள் மட்டும் மனைவியுடன் சந்தோஷமாக வழ்ந்த பொன்னையா மறுநாள் இராசம்மாவை வெட்டிக் கொலை செய்துவிட்டுத் தாமும் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டாராம்.

இவரின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையில் அவர்களது மூத்தமகன் சாட்சிமளித்தார்.

பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

---

## ஜி. ஜி.

### கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம், செவ்.

தீபாவளியன்று நடைபெறும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிக் கூட்டத்தில்தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் கலந்துகொள்வார்.

---

## பொருளாதார நோபல் பரிசு

வாஷிங்டன், அக். 26

1970-ம் ஆண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அமெரிக்க பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் சாமுவல்சனுக்கு கிடைத்துள்ளது.

## "செனட் ஒழிப்பு மசோதா பழிவாங்கும் நடவடிக்கை"

### ஆட்சிமன்றத்தில் தர்மலிங்கம்

கொழும்பு, திங்கள்

புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதில் அரசியல் நிர்ணயசபை ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குள் செனட்சபையை ஒழிக்க ஒரு மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது பழிவாங்கும் ஒரு நடவடிக்கையாகும்.

இவ்வாறு தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த உடுவில் எம். பி வி, தர்மலிங்கம் ஆட்சி மன்றத்தில் செனட்சபை ஒழிப்பு மசோதாமீது பேசுகையில் குறிப்பிட்டார், அரசியல் அமைப்பு அலுவல அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா செனட் ஒழிப்பு மசோதா 2-ம் வாசிப்பை சமர்ப்பித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில் செனட்சபை ஒழிப்பு ஒரு பழிவாங்கும் நடவடிக்கை என்றும் செனட்சபை இருக்கத்தான் வேண்டுமென்றும் கூறினர்.

டாக்டர் கொல்வின் பேசுகையில் பிரிட்டிஷ்முடியாட்சியினுல் சட்டங்கள் திணிக்கப்பட்டு வந்துள்ளனவென்றும் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படவில்லையென்றும் 96 நாடுகளில் இப்படியானஒரு சபை இல்லாது ஒரே சபையுடன் தான் இயங்கி வருகிறதென்றும் கூறினர்.

---

### வடபகுதி பொலிஸ் அதிபர்

## எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு வங்கிகளிலும் இன்று காலை 7மணிமுதல் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்படும். யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு வங்கியிலும் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரின் தலைமையில் 8 பொலிஸ் கன்ஸ்டபிள்கள் கடமையாற்றுவார்கள்.

கிராமப்புறத்திலிருந்து வரும் ஏழைகளிடம் 100 ரூபா 50 ரூபா நோட்டுக்களுக்கு குறைந்தபணம் கொடுத்து மோசடி செய்யும் புரோக்கர்மார்களை பொலிசார் கண்காணிப்பார்கள். 1000 ரூபாவுக்கு மேல் பணம் வைத்திருப்பவர்கள் மற்றவர்களிடம் கொடுத்து அவற்றை மாற்ற முற்பட்டால் அவர்களும் கண்காணிக்கப்படுவார்களென்றும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார் தூரஇடங்களிலிருந்து 100 ரூபா 50 ரூபா நோட்டுக்களை கொண்டுவரும்போதும் அவற்றை வங்கியில் மாற்றிக்கொண்டு போகும் போதும் மிகவும் கவனமாக இருக்கவேண்டுமெனவும் பொதுமக்களுக்கு பொலிஸ்அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள்வங்கி, இலங்கை வங்கி, மேர்க்கண்டைல் வங்கி, கூட்டுறவுவங்கி ஆகியவற்றில் இன்று காலைமுதல் 100 ரூபா 50 ரூபா நோட்டுகளைக் கொடுத்து புதிய நோட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

## கஞ்சா ஒழிப்பில் பொலிசார்

கொழும்பு, திங்கள்

கஞ்சாச் செய்கையை அழிப்பதற்காக கஞ்சாப் பயிர் அழிப்பு நாசினிகளை தெளிக்கவும் கஞ்சாச் செய்கைகளைக் கண்டுபிடிக்கவும் விமானப்படை விமானங்கள் ஹெலிகொப்டர்கள் ஆகியவற்றை விரைவில் பொலிசார் உபயோகிக்கவிருப்பதாகப் பொலிஸ் அதிபர் இன்று தெரிவித்தார்.

(பி.ப.ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

சுன்னுகத்தில் புதிதாக தொடங்கவிருக்கும் தியேட்டருக்கு வேலையாட்கள் தேவை. 40 வயதுக்கு உட்பட்டோர் மாத்திரம் 5-11-70க்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். தெரிந்தெடுப்போர் அவரது பதவிக்கேற்ற பிணைப்பணம் செலுத்தவேண்டும். சிலோன் மெற்றல் லைன் இன்டஸ்றீஸ், ஸ்ரேசன் ரோட், சுன்னுகம். 2372

இராணுவத்தில் சேவை செய்த நற்குணமுடைய யாழ்ப்பாணத்துத் தமிழ் வாலிபருக்கு வடமாகாணத்தில் வேலை தேவை. காவல், பாதுகாப்பு வேலைகளிலும் அனுபவம் உண்டு விளம்பர இல: 2366, மே/பா "ஈழநாடு" 2366

வேலை:

ஆங்கிலம், தமிழ் G. C. E. சித்தியடைந்தவரும் சிங்களம் நன்ருகப் பேசக்கூடியவரும் திறமையான நற்சாட்சிப்பத்திரங்களுடையவர்க்கு (வயது 38) வேலை தேவைப்படுகிறது. விளம்பர இல: 2367, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம் 2367

முகாமையாளர்:

உருத்திரபுரம் ஜெயந்தி நகர் ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் பதவிக்குக் கரைச்சிப் பகுதியினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமை: 7-ம் வகுப்பாவது சித்திபெற்றவராய், கூட்டுறவுப் பயிற்சிப்பத்திரமுடையவராய், 22 வயதுக்கு மேற்பட்டவராயிருக்கவேண்டும். பிணை: பணம் ஆயிரம் ரூபா; ஆதனம் ஈராயிரம் ரூபா. வேதனம் சகல படிகளுமுட்பட மாதம் 125 ரூபா கொடுக்கப்படும். அண்மையில் இருவரிடமிருந்து பெற்ற சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் 8-11-70க்கு முன் அனுப்பப்படல் வேண்டும். க. யோ. ஆசிநாதன், தலைவர், 25-10-70. 2369

எமது யாழ்ப்பாண கிளை நிலையத்தில் வேலை பார்ப்பதற்கு தகுதி வாய்ந்த பெண் கணக்காளர் தேவை. விண்ணப்பிக்கவும், முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஜபார்ஜி பிறதர்ஸ், இல: 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 2360

மோட்டார் உதிரிப்பாகம் விற்பனை செய்யும் ஸ்தாபனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள சேல்ஸ்மன் தேவை பிணைப்பணம் கட்டக்கூடியவர் விண்ணப்பிக்கவும்.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### 1970-ம் ஆண்டின் உப வரவு-செலவுத் திட்டம் இல. 2

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 214(2) (பி)பிரிவின் பிரகாரம், யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் 1970-ம் ஆண்டிற்கான இரண்டாவது உப வரவு-செலவுத் திட்டம் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ம் திகதி தொடக்கம் ஏழு நாட்கள் வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்குமென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

நா. ச. துரைராஜா,
முதல்வர்,
யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
ஒக்டோபர் 23, 1970.
2528

## தேவை

ஆசிரியர்:

பட்டதாரி ஆசிரியர்கள் செங்கதிர்ச் செல்வர் கல்விச்சேவையில் பணியாற்றவும், செங்கதிர் உதவி ஆசிரியர்களாகக் கடமை புரியவும் எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர் தேவை. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தகுந்த பாடங்களைக் கொண்டவர்களும் பாட விபரங்களுடன் விண்ணப்பிக்கலாம். த. பெ. எண் 47, யாழ்ப்பாணம். 2373

## சீர்திருத்த வட்டாரங்கள்

மட்டுவில், திங்கள்

நாவற்குழி கிராமசபையில் முன்னுள்ளதை விட மேலும் இரண்டு வட்டாரங்கள் சீர்திருத்த வட்டாரங்களாக அமைக்கப்பட வேண்டும் என்று நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு எஸ். சடாச்சரம், திரு என். பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற குற்றத்தடுப்பு இயக்கக் கூட்டமொன்றில் வலியுறுத்தியுள்ளார்.

இப்படியாக சீர்திருத்த வட்டாரங்களை அமைப்பதினுல் வரி சற்று அதிகமானுலும் இதன்மூலம் அரசாங்கத்திடம் நிதிபெற்று சில வேலைத்திட்டங்களை அமை

## மன்னுர் தேர்தல் ஆட்சேப வழக்கு

# 'ரஹிமை பின்கதவால் சந்தித்த பணக்காரருக்கு ரெண்டர்கிடைத்தது'

### வைத்திலிங்கம் பேசியதாக பேர்ணுட் ராவன் சாட்சியம்

(நமது நிருபர் கா. யோகநாதன்)

யாழ்ப்பாணம், செவ்.

மன்னுர் தொகுதியில் 3 பேர் போட்டியிடுகிருர்கள். முதலாவது சுதந்திரக்கட்சி அபேட்சகரான காதர் இரண்டாவது யூ என். பி அபேட்சகரான மன்னுர் பட்டண சபை தலைவர் ரஹிம், மூன்ருவது தமிழினத்தின் சார்பில் அழகக்கோன் போட்டியிடுகிருர். மூன்றிலும் 2 கட்சியும் சிங்கள கட்சி. நாம் தமிழர்களாக இருப்பதால் தமிழரசுக் கட்சியை ஆதரிக்கவேண்டும். ஆட்சிமன்றத்துக்கு தகுதியான நேர்மையுள்ளவரை அனுப்பவேண்டும் அழகக்கோன் ஐயா தகுதியானவர். இப்படி வைத்திலிங்கம் கூட்டத்தில் பேசினுர். அவர் பேசிக்கொண்டிருந்தபோது கல்லெறி விழுந்தது நானும் நண்பர்களும் வீட்டிற்குப்போனேம்.''

மன்னுர் தேர்தல் ஆட்சேப வழக்கில் சாட்சியமளித்த மனுவல் பேர்ணுட் ராவன் நேற்றுக்காலை மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: கடந்த தேர்தலில் நான் வாக்காளராக இருந்தேன். ரஹிமை எனக்கு தெரியும். அழகக்கோனையும் தெரியும்எனக்குசொந்த நிலம் இல்லை. 4 ஏக்கர் குத்தகைக்கு எடுத்திருக்கிறேன். கடையும் வைத்திருக்கிறேன் வங்காலை கிராமசபையில் உறுப்பினராக இருக்கிறேன். இந்தவருடம் மே மாதம் முருங்கனில் அரசியல் கூட்டத்திற்கு சென்றிருந்தேன். இரண்டுமூன்று நண்பர்களும் வந்தார்கள். சயிக்கிலில் போனேம். வங்காலையிலிருந்து மாலை 6 மணிக்கு புறப்பட்டோம். கூட்டம்நடந்த திகதி ஞாபகமில்லை. வைகாசி முதல் பகுதி என ஞாபகமிருக்கிறது. முருங்கனுக்கு 8 45 மணிக்குச் சென்றேன் வங்காலையிலிருந்து முருங்க

பட்டது.

கூட்டத்தில் வைத்திலிங்கம் ரஹிமைப்பற்றி சொன்னதாவது: 'மன்னுர் பட்டணசபை தலைவர் ரஹிம் ஒரு சுயநலவாதி அதற்கு உதாரணமாக 70-ம் ஆண்டு பட்டணசபையில் இறைச்சிக்கடை ரெண்டர் கோரப்பட்டிருந்தது. 2 பேர் மனு பண்ணியிருந்தனர். ஒருவர் பணக்காரர்; மற்றவர் ஏழை: அந்த ஏழை, மனைவியின் தாலி, நகைகளை அடைவு வைத்து மனுப்பண்ணியிருந்தார். பணக்காரர் செல்வாக்கை பிரயோகித்து மன்னுர் பட்டணசபை தலைவக் ரஹிமை பின் கதவால் சந்தித்ததால் முறையாக மனுச்செய்த ஏழைக்கு ரெண்டரை கொடுக்காமல் பணக்காரருக்கு கொடுத்திருந்தார். அத்தாட்சி வேண்டுமென்ருல் என்னிடம் உண்டு அதைநான் காட்ட முடியும் என்ருர். வைத்திலிங்கம். ஒரு என்வலப்பை எடுத்துக்காட்டினுர்.

அந்தநேரம் சனங்கள் கல்லால் எறிய தொடங்கினுர்கள். கூட்டம் கலையத் தொடங்கியது. பொலிசார் அங்கும் இங்கும் ஓடினுர்கள். நானும் நண்பர்களும் நேரடியாக வீட்டிற்குப் போனேம். கல்லெறிபற்றியும், வைத்திலிங்கம் பேச்சு பற்றியும் ரஹிமிடம் சொன்னேன் 2 நாளுக்குப்பின் ரஹிம் என்னிடம்வந்தார்.

எதிர் மனுதார் சார்பில் ஆஜரான அட்வக்கேட் எச். டி. தம்பையா சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தார்.

வழ: மனுதாருக்கு தீவிரமாக வேலை செய்தீர்?- ஆம்.

வழ: வங்காலையில் ஏதாவது கூட்டத்திற்கு போனீரா?- ஆம்.

வழ: வங்காலையில் யூ என். பி. கூட்டம்எப்ப நடந்தது?- ஞாபகமில்லை.

வழ: எங்கே நடந்தது?- ம வட்டாரத்தில் கடைக்குப்

நன்மைகளைச் செய்துள்ளது. அதனுல் தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கவேண்டும். மன்னுர் பட்டினசபைத்தலைவர் போட்டியிடுகிருர். அவரை நாம்ஆதரிக்கவேண்டும். இவ்வளவுதான் ஞாபகமிருக்கிறது.

தமிழரசுக்கூட்டத்தின் பேச்சாளர் யார்?-ஞாபகமில்லை.

வழ:- நானுட்டான் யூ. என். பி. கூட்டத்திற்குப் போனீரா?- ஆம்.

வழ! நானுட்டான் தமிழரசுக் கூட்டத்தில் ஆரம்பம் முதல் இருந்தீரா?-இல்லை.

வழ: தமிழரசுக்கூட்டம் ஒன்றுமே ஞாபகமில்லை?- இல்லை

வழ: யூ என். பி கூட்டம் எப்ப நடந்தது?- தேர்தலுக்கு 1 கிழமைக்குமுன்

வழ:யார்பேச்சாளர்கள்?- காதர்.

வேறு கூட்டங்களுக்குப் போனீரா?- இல்லை.

வழ:- முருங்கன் திருச்செல்வம், வைத்திலிங்கம் பேசுவாரென்று அறிவித்தார் என்றீர்?-ஆம்.

வழ:- வைத்திலிங்கம்பேசியது இவ்வளவுதான்?- அதற்குப் பின் பேசினுரோ தெரியாது.

வழ:- முருங்கன் கூட்டத்தில் மேடைபோடப்பட்டிருந்ததா?- மேடை இல்லை, மேசைதான் இருந்தது.

வழ: நானுட்டான் தமிழரசுக்கூட்டத்தில் மேடைஇருந்ததா?-இல்லை.

வழ: அழகக்கோன் பக்கத்தில் இருந்தார்?- ஆம்.

வழ.- அது பொய் என்கிறேன்?-இல்லை.

வழ: நீர் அக்கூட்டத்திற்குப் போகவில்லை?- நான் போனனுன்.

வழ: 2 நாட்களின்பின் ரஹீமை சந்தித்தீர்:- ஆம்.

வழ: வங்காலையில்?- ஆம்.

வழ: என்ன சந்தர்ப்பத்தில்?- 2 மணிக்கு என்னைத் தேடி வந்தார்.

வழ: எதற்கு?- அரிப்பில் எனது சொந்தக்காரர்கள் இருக்கிருர்கள் அதற்கு

தேடிப் போனுர்?- ஆம்.

வழ: கூட்டத்தைப்பற்றி கேட்டாரா?- அவர் கேட்கவில்லை. நான் சொன்னேன்

வழ:- அவர் என்ன சொன்னுர்?- தமக்கென்னபேசினுல் பேசட்டுப்என்ருர்,

வழ: வேறு கூட்டத்திற்கு போகும்படி உமக்கு சொல்லவில்லை?-இல்லை'

வழ: அக்கறை காட்டுவதாக தோற்றமளித்தாரா?- இல்லை'

வழ. தேர்தல் முடிந்து ஒருமாதத்தின் பின்மனுதார் உம்மை சந்தித்தார்?- ஆம்.

வழ: என்ன சொன்னுர்?- முருங்கன் கூட்டம் பற்றி ஞாபகம் இருக்கிறதா வழக்குப் போட்டிருக்கிறேன். உம்மைசாட்சியாகப் போட்டிருக்கிறேன் நீர் சொல்லுவீரா என்ருர் நான் சொல்லுவதாக சொன்னேன்.

நீதி: வைத்திலிங்கத்தின் பேச்சில் கூடாதவை எவை?- சுயநலவாதி என்பதும் பின்கதவால் சந்தித்தார் என்பதும்,

நீதி: முழுப்பேச்சும் எப்படி ஞாபகமிருக்கிறது குறிப்பு எடுத்தீரா? இல்லை.

நீதி: வீட்டில் குறித்துக் கொண்டீரா?- இல்லை

வழ; நீர் வைத்திலிங்கம் பேசும் போது கூட்டத்தில் இருக்கவில்லை? இருந்தேன்.

வழ: நீர் கூறியதுபொய்?- கண்ணுல் கண்டதையும் காதால் கேட்டதையும் சொல்லுகிறேன்.

மனுதாரின் வழக்கறிஞர் குரூசேட் தம்பையா சாட்சியை மறுவிசாரணை செய்தார்.

வழ: பின்கதவால் சந்திக்கிறது என்ருல் என்ன?- லஞ்சம் வாங்குகிறது என எனக்குத்தோன்றுகிறது.

வழ: வேறு கூட்டத்தில் இப்படிப் பேசப்பட்டதா? இல்லை.

வழ: லஞ்சம் என்றசொல் கூட்டத்தில் பாவிக்கப்படவில்லை?- இல்லை.

வழ: நீர் அப்படி விளங்கிக் கொண்டீர்?- ஆம்.

விசாரணை தொடர்ந்து நடை பெறுகிறது.

## குழிக்குள் சிசுவின் சடலம்

### பொலிசார் தோண்டி எடுத்தனர்

சங்கானை, சனி

சங்கானைப் பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றைத் தொடர்ந்து இங்குள்ள ஒரு வீட்டின் பின்புறம் புதைக்கப்பட்டிருந்த பச்சிளம் குழந்தையொன்று வெளியில் எடுக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார். புன்னலைவைச் சேர்ந்த கிருஷ்ணன் கோவிலடியில் இச்சம்பவம் நடந்துள்ளது.

சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் செனவிரத்ன, பொலிஸ்கான்டபிள்கள் தவ்வீக், கந்தசாமி ஆகியோர் ஸ்தலத்திற்குச் சென்று சந்தேக நபராகிய பெண்ணைக் கைது செய்ததுடன் சந்தேக நபர் வசித்த வீட்டின் பின்புறத்தில் பலத்த சோதனையிட்டு குழியில் புதைக்கப்பட்டிருந்த சிசுவையும் வெளியில் எடுத்தனர்.

சிசு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் கொண்ட பொலிசார்பிரேத பரிசோதனை நடாத்துவதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். சந்தேக நபராகிய பெண் சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் பொலிஸ் பாதுகாவலுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொலிஸ் விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது:

## பாடசாலை தரம் உயர

### ஆசிரிய மணி யோசனை

மட்டுவில், திங்கள்

''கீழ்வகுப்பில் படிக்கும் தமது பிள்ளைகளை கல்லூரிகளிலோ, மகாவித்தியாலயங்களிலோ சேர்த்து விட்டால் தான் அவர்களின் கல்விநிலை உயரமுடியும் என்ற எண்ணத்தோடு இன்று கல்லூரிகளையும் பெரிய மகாவிததியாலயங்களையும், பெரும்பாலும் பெற்ருர் நாடியோடும் நிலை வளர்ந்து கொண்டே போகிறது. இந்த நிலைமாறி கனிஷ்டபாடசாலைகளிலும், ஆரம்ப வகுப்புமுதல் கீழ்வகுப்பு மாணவர்களின் கல்வி நிலை உயர்வதற்கான சிறந்த அத்திபாரக்கல்வி இடப்பட முடியும் என்ற நம்பிக்கையுடன் கனிஷ்ட பாடசாலைகளில்தமதுபிள்ளைகளைச் சேர்ப்பதன் மூலமே பாடசாலையினதும், பிள்ளைகளினதும் தரம் உயர முடியும் என்ற நல்லெண்ணத்தையும் இன்றைய பெற்ருர் உணரவேண்டும்''

இவ்வாறு மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பண்டிதர், ஆசிரியமணிதிரு செ. சிவலிங்கம் தனதுஉரையின்போது கூறினுர். வட்டார வித்தியாதிகாரி திரு. வி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் திரு. சிவலிங்கம் தனது உரையில் தொடர்ந்து கூறியதாவது.

''எமதுஎதிர்காலசமுதாய

எனவே எமது பரம்பரைச் சொத்துப்போன்று வளர்ந்து கொண்டிருக்கும் இக் கல்விச் சாலைகளின் நாலாவித வளர்ச்சிக்கும் நாம் அரசாங்கததின் கையையே எதிர்பார்த்திருப்பது முற்றிலும் தவருன செய்கையாகும். எங்கள் எதிர்கால சமுதாயத்தின் வளர்ச்சியையும் கல்வியையும் அடிப்படையாகக் கொண்ட இப் பாடசாலை நிலையில் உயரவும், தரத்தில் உயரவும் உழைக்க வேண்டிய பொறுப்பு எமது பெற்ருேர்கள் கையில்தான் தங்கியுள்ளது.' என்ருர்.

திருமதி சந்தசாமிமாணவ மாணவிகளுக்குப் பரிசில்கள் வழங்கினுர் இதையடுத்து, மேற்படி பாடசாலையில் நீண்டகாலமாக ஆசிரியராகப்பணிபுரிந்து இளைப்பாறிய ஆசிரியர் திரு சுவாமிநாதருக்கு பிரியாவிடை வைபவம் ஒன்றும்நடைபெற்றது.

## கடல் தொழிலாளர் கூ. க. வி. சங்கம்

யாழ்ப்பாணம் திங்கள்

பாஷையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுக் கடனுதவி விற்பனவுச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு அ. போல்ராஜா தலைமையில் நடைபெற்றது கூட்டுறவுப்பரிசோதகர் திரு. நா ரகுநாதனும் மீன்பிடிப்பரிசோதகர் திரு. ஆ தேவதாசனும் சமுகங்கொடுத்திருந்தனர்.

அங்கத்தவர்கள் கடன் மூலம் வெளி இணைப்பு இயந்திரம் பெறுவதற்கு மீன்பிடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டார் உதிரிப்பாகம் விற்பனை செய்யும் ஸ்தாபனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள சேல்ஸ்மன் தேவை பிணைப்பணம் கட்டக்கூடியவர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2370 C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2370

...றில் வலியுறுத்தியுள்ளார்.

இப்படியாக சீர்திருத்த வட்டாரங்களை அமைப்பதினுல் வரி சற்று அதிகமானுலும் இதன்மூலம் அரசாங்கத்திடம் நிதிபெற்று சில வேலைத்திட்டங்களை அமைக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

...கூட்டம்நடந்த திகதி ஞாபகமில்லை. வைகாசி முதல் பகுதி என ஞாபகமிருக்கிறது. முருங்கனுக்கு 8 45 மணிக்குச் சென்றேன் வங்காலையிலிருந்து முருங்கனுக்கு 12 மைல் தூரம்.

கூட்டத்தில் முருங்கன் திருச்செல்வம் பேசிக்கொண்டிருந்தார் வைத்திலிங்கம் பேசப்போவதாகவும் அவர் கூறினுர் வைத்திலிங்கத்தை முன்னர் தெரியும். அழகக்கோனும் அக்கூட்டத்தில் இருந்தார். அவரை நன்ருகத் தெரியும். வைத்திலிங்கம்பேசும்போது அழகக்கோன் இருந்தார். 75 யார் தூரத்தில் நின்றேன். கூட்டத்தில் 500 பேர் இருந்தார்கள். பெட்ரோல் மாக்ஸ் வெளிச்சம் இருந்தது. ஒலிபெருக்கி பாவிக்கப்...

...பேன்ரா?- ஆம்.

வழ: வங்காலையில் யூ என். பி. கூட்டம்எப்ப நடந்தது?- ஞாபகமில்லை.

வழ: எங்கேநடந்தது?-9ம் வட்[டா]ரத்தில் கடைக்குப் பக்கத்தில்.

வழ: யார் தலைமை வகித்தது?- தொம்பிலிக் பிராண்டா.

வழ:- மொத்தாம் கூட்டத்தில் என்னபேசினுர்?- தேசிய அரசாங்கம் நல்ல அரசாங்கம். விவசாயிகளுக்கு பல...

வழ: என்ன சந்தர்பபத்தில்?- 2 மணிக்கு என்னைத் தேடி வந்தார்.

வழ: எதற்கு?- அரிப்பில் என் சொந்தக்காரர்கள் இருக்கிருர்கள் அதற்[கு]...

வழ: தேர்தலுக்கு ஆ[தர]வு...

...இல்லை.

வழ: லஞ்சம் என்றசொல் கூட்டத்தில் பாவிக்கப்படவில்லை?- இல்லை.

வழ: நீர் அப்படி விளங்கிக் கொண்டீர்?- ஆம்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர் — லட்சுமி ஜெயலலிதா — அசோகன் நடித்த

## மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்-காஞ்சனு நாகேஷ்-மஞ்சுளா நடித்த

## சாந்தி நிலையம்

இன்று முதல் வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 10-00 போயா நாட்கள் 10-30 மெற்னி

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இர்வு 9-30 மணி

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி

அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி

வி. நாகையா — ஜி. சகுந்தலா

மற்றும் பலர் நடித்த

## உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி. இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

இன்று மட்டும்

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

போயா நாட்களில்4 காட்சிகள்

எஸ்.எஸ் ஆர். — விஜயகுமாரி நடித்த

## ஆசை அலைகள்

ஸ்ரீகாலிங்கன் இணுவில்

தினசரி 2-30, 6-30, 9-30

இன்று மட்டும் யாருக்காக அழுதான்

நாளை முதல் மலைக்கள்ளன்

வெஸ்லிசினிமா மானிப்பாய்

தினசரி 6-30, 9-30

போயா, பிரீபோயா 2-30

திலிப்குமார் - வைஜந்திமாலா நடித்த

## மதுமதி (ஹிந்தி)

REGAL
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya days 4 Shows
James Stewart,
Raquel Welch
in
BANDOLERO

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Poya, Pre-poya 4 Shows
Noelwillman
in
THE REPTILE


# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 27—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வாத்தியஇசை, 7-00 திரைகானம், 7-15 கோட்டுவாத்தியம், 7-45 நேயர் கடிதங்கள், 8-0 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்தித்தொகுப்பு.

வலி. மேற்கு

# கயரோக நிவாரணப் போட்டி முடிவுகள்

சுழிபுரம், திங்கள் வலிகாமம் மேற்கு கயரோக நிவாரண சங்கம் நடத்திய கயரோக நிவாரணப் பிரசாரப் போட்டிகள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில்நடைபெற்றது. சனசமூக நிலையங்கள், பாடசாலை மாணவர் சங்க உறுப்பினர், தாதிமார்கள் இப் போட்டியில் கலந்து கொண்டனர் போட்டி முடிவுகள் வருமாறு:

கயரோகப் புதிர்ப் போட்டி: இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மானிப்பாய் சென். ஆன் பாடசாலை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளவாலை சென். கென்றீஸ் கல்லூரி,

சங்கங்கள்: பண்டத்தரிப்பு வை எம். சி. ஏ, பண்ணுகம் தெற்கு ஸ்ரீ முருகன் ச.ச. நிலையம்.

சம்பாஷனை பாடசாலை: பண்ணுகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம், சித்தன்கேணி கணேச வித்தியாலயம், இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயம்.

சங்கங்கள்: நவாலி முருகானந்த ச. ச. நிலையம். பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ, நவாலி வை. எம். சி. ஏ,

வைத்தியசாலை: மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை, மானிப்பாய் கிறீன் ஞாபக வைத்தியசாலை

கயரோகப் பாட்டு-பாடசாலைகள்: பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இளவாலை கன்னியர் மடமகா வித்தியாலயம் பண்ணுகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

சங்கங்கள்: நவாலி வை எம் சி ஏ, வட்டுக்கோட்டை நேருஜி ச ச நிலையம், சித்தன்கேணி கலைமகள் கலைக் குழு.

வைத்தியசாலை: மானிப்பாய் கிறீன் ஞாபக வைத்தியசாலை,

வில்லுப்பாட்டு-பாடசாலை: சில்லாலை றோ க பெண்கள் பாடசாலை.

சங்கம்: நவாலி முருகானந்த ச ச நிலையம், சித்தன்கேணி கலைமகள் கலைக் குழு.

கயரோக நாடகம்-பாடசாலை: நவாலி மகா வித்தியாலயம்

சங்கங்கள்: நவாலி வை எம் சி ஏ, நவாலி முருகானந்தா ச ச நிலையம், பண்டத்தரிப்பு வை எம் சி ஏ.

வைத்தியசாலை: மானிப்பாய் கிறீன் ஞாபக வைத்தியசாலை, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை [பெண்], மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை [ஆண்]

...வில், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் திரு. சிவலிங்கம் தனது உரையில் தொடர்ந்து கூறியதாவது.

''எமது எதிர்காலசமுதாயத்தை சீரும் சிறப்புமாகவும், கண்ணியம், கடமை, கட்டுப்பாடு, கடமைஉணர்ச்சி ஆகிய பண்புகளுடன் சிறப்புறச் செய்வது கல்வி ஒன்றுதான் இதே வேளையில் ஒரு சில மணிநேரம் மட்டும் ஆசிரியர்களின் கண்காணிப்பில் இருக்கும் இன்றைய சிறுர்கள் மிகமிககூடியநேரம் பெற்றுரின் பாதுகாப்பில் தான் இருக்கிருர்கள் என்பதை பெற்றுர் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது' எனவே மணவரின் பண்புகளை உயர்த்தும் பொறுப்பை முழுக்க முழுக்க ஆசிரியர்களின் தலையில சுமத்திவிட்டு பெற்றுர், தாம்மட்டும் ஏனோ தானே என்றுஇருந்து விடலாம் என்ற மனப்பான்மை இன்றைய பெற்றுர் மனதிலிருந்தும் மறைந்து, சிறுர்கள் உயர்விற்கு பெற்றுரும்ஆசிரியர்களுடன் பூரண ஒத்துழைப்புக்கொடுக்க வேண்டும்'' என்றுர்.

பெற்றுர் ஆசிரியர் சங்கச் செயலாளர்திரு எஸ். முத்துலிங்கம் பேசுகையில் ''எமது மத்தியிலுள்ள இப்படியான பாடசாலைகளில்தான் எமது மூதாதையர்முதல்பரம்பரை பரம்பரையாக கல்வியறிவூட்டப்பட்டுவந்துள்ளனர்...

...மீன்பிடிப்பரிசோதகர் திரு. ஆ தேவதாசனும் சமுகங் கொடுத்திருந்தனர்.

அங்கத்தவர்கள் கடன் மூலம் வெளி இணைப்பு இயந்திரம் பெறுவதற்கு மீன்பிடி இலாகாவைக் கோருவதென்றும் வெடிவைத்து மீன்பிடித்தல் சிறுவலைத் திருட்டு பட்டிஇழுப்புஆகியவற்றைத் தடுக்கும் பொருட்டு வெளி இணைப்பு இயந்திரமும் வள்ளமும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மீன்பிடி இலாகாவால் வழங்கப்பட்டிருந்தும் மேற்குறிப்பிட்ட குற்றங்கள் தொடர்ந்து நடைபெறுவதாயும் ஆகவே அவற்றைத்தடுக்கும் பொருட்டுவேண்டியநடவடிக்கை எடுக்க மீன்பிடி இலாகாவைக்கோருவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நடப்பு வருட நிர்வாகஸ்த்தர்களாகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்: திரு. அ. போல்ராஜா உபதலைவர் திரு. த. சுவக்கின்பிர் செயலாளர் திரு. வெ. மிக்கேவ் உபசெயலாளர்: திரு. அ. தோமஸ் தனதிகாரி: திரு. வ ஸ்ரனிஸ்லாஸ்

திருவாளர்கள் அ. அந்தோனிப்பிள்ளை, சியோசவ் பொ, பிலிப் வெ. சூசைமுத்து ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரியப்பட்டனர்.


## தீபாவளி மலிவு விற்பனை

கவுண்களுக்கும் சிவ்டுகளுக்கும் ஏற்ற

பூப்போட்ட கிளேஸ் கொட்டன் ம. வி. 4-25 க்கு மேல்

பூப்போட்ட வொயில் சேலைகள் ம. வி. 17-50 க்கு மேல்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# டயருமஸ்

54, 60, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி: 316)

★ உறுதியானதும்

★ நீடித்து உழைப்பதும்

★ தன்னிகரற்றதுமான

# "வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு — பித்தளை - மரஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனுல் ஒரு சிறந்த பொருளைவாங்குவதோடு உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்:

என். வைத்திலிங்கம்நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்

450, பழைய சோனக தெரு, கொழும்பு-12

தொலைபேசி: 33143—4.

கிளை: 38, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூர் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்க 'நிதி உதவி

கோட்டை, திங்கள்

உள்ளூர் கலைஞர்களை ஊக்குவிக்குமுகமாக உள்ளூர் கலைமன்றங்களுக்கு ஐந்தரை லட்சம் ரூபா வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. லங்கா பௌத்தஸ்தாபனம், சாகித்திய மண்டலம் மற்றும் பௌத்தநிறுவனங்களுக்கும் மான்யமாக வழங்கப்படவிருக்கிறது.

இதைவிட பௌத்த தர்ம பாடசாலைகளுக்கு மேற்படி ஒதுக்கப்பட்ட பணத்தில் ஒன்றரை லட்சம் வழங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. லங்கா பௌத்த நிறுவனத்துக்கு இதில் இரண்டு லட்சம் ரூபா வழங்கப்படவிருக்கிறது.

## 'இன மத மொழி பாகுபாடு அகற்றப்பட வேண்டும்'

யாழ்ப்பாணம், திங்கள்

'இன மத மொழி பாகுபாடு இருந்தால், எந்த ஒரு சிறிய நாடும் முன்னேற்றமடைய முடியாது. ஒரு நாடு பொருளாதார சுதந்திரம் பெறவேண்டுமானால், இன மத மொழி பாகுபாடு அறவே ஒழியவேண்டும்'.

நீதியரசர் வின்சென்ற் தாமோதரம் யாழ் நூல் நிலையத்தில் நடந்த ஐ நா. தின 25வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி நடந்த கருத்தரங்கில் பேசுகையில் கூறினார் ஓய்வு பெற்ற பேராசிரியர் திரு கு நேசையா தலைமையில் நடந்த இவ் விழாவில் நீதியரசர் மேலும் பேசுகையில், அபிவிருத்தியடையாத நாடுகளுக்கு ஐ நா சபை செய்யும் சேவைகளைக்குறிப்பிட்டார்.

யாழ் அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா பேசுகையில், அபிவிருத்தி குன்றியநாடுகளுக்கு ஐ நா சபை பலவிதத்திலும் உதவிகள் செய்து வருவதாகவும், உலக வல்லரசுகள் சிறிய நாடுகளை சுறுபோடுகிற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன வென்றும் இந்த நடவடிக்கையிலிருந்து ஐ நா சபை பாதுகாப்பு அளித்து வருகிறதென்றும் கூறினார்.

யாழ் இந்துக் கல்லூரி அதிபர் திரு என். சபாரத்தினம் உட்பட வேறு பலரும் பேசினர்.

(கு வி ம)

## 'இறந்தவரும் நானும்நீண்ட காலம் றிமாண்டில் இருந்தோம்'

மட்டுவில் திங்கள்

''சடையன் கொலைவழக்கில் இறந்த இராஜுவும் நானும் எதிரிகளாக நீண்ட காலம் றிமாண்டில் இருந்தோம். இறந்தவர் எனது அயலவர் அவர்தனது குடும்ப விவகாரங்களை என்னிடம் கலந்து ஆலோசனை செய்வது வழக்கம், கொடிகாமம் சந்தியில கொலைசெய்யப்பட்டு இறந்த ஐயனை எனக்குத் தெரியும் இறந்தவருக்கும், ஐயனுக்கும் ஐயன் குடும்பத்தினருக்கு மிடையில் ஏதாவது பகைகோபங்கள் இருந்ததாக நான் அறியவில்லை. ஐயன் இறந்ததின் பின் ஒருவேளை ஏற்பட்டிருக்கலாம்!''

கொடிகாமம் ராஜு என்றழைக்கப்படும் ஆறுமுகம் கனகரத்தினம் கொலை வழக்கில் சாட்சியமளித்த இராஜுவின் அயலவரான பொ' குஞ்சுத்தம்பி தனது சாட்சியத்தின்போது மேற்கண்டவாறு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையிற் கூறினார்.

இந்தவழக்கில் கொடிகாமத்தைச் சேர்ந்த ராஜு என்றழைக்கப்படும் ஆறுமுகம் கனகரத்தினம் என்பவரைத் துப்பாக்கியால்சுட்டுக்கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த சாமி என்றழைக்கப்படும் சின்னப்பொடி கந்தையா, எஸ் வல்லிபுரம் எஸ் சற்குருநாதன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் என் அருணாசலம் ஸி. பாலக்கிருஷ்ணன் ஆகியோரின் அனுசரணையுடன், அட்வகேட் திரு. எஸ். தம்பித்துரை ஆஜரானார்.

விவசாயத்தில்

## 'பயன் குறைய இதுதான் காரணம்'

முசலி, திங்கள்

''மன்னார் மாவட்டம் பெரும்பாலும் விவசாயத்த

## 'பொலிஸ்க வலை

# தென்னாபிரிக்காவுக்கு பிரி. ஆயுதம்

# பிரிட்டிஷ் கான்டபரி ஆர்ச் பிஷப்பும் 100 போதகர்களும் எதிர்ப்பு

# லண்டன் நகரில் மக்கள் ஆர்ப்பாட்டம்

லண்டன் அக்.26

தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் வழங்க விருப்பது தங்களுக்கு பெரிதும் கவலையளித்திருப்பதாக கான்டபரி ஆர்ச் பிஷப்பும் 100 இங்கிலாந்து திருச்சபை போதகரும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கிறார்கள்.

தென்னாபிரிக்கா வுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்க விருப்பது குறித்து நேற்று லண்டனில் ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள். இவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் பெரும்பாடு படவேண்டியிருந்தது:

தென்னாபிரிக்கா வுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் ஆயுதங்கள்விற்பதுபற்றி ஆலோசித்துவருவது தெரிந்ததே. உலக நாடுகள், விசேஷமாக ஆபிரிக்க ஆஸிய நாடுகள் இதற்கு பெரும் எதிர்ப்புக் காட்டி வருகின்றன

தென்னாபிரிக்காவின் கடற்பிராந்திய பாதுகாப்பில் பிரிட்டனுக்கு அதிக அக்கறையிருப்பதின் காரணமாகவே அந்த நாட்டுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதுபற்றி யோசிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனல் தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் வழங்கும் ஆயுதங்களை அந்த நாட்டு அரசாங்கம் சுதேசிகளின் உரிமைக் கிளர்ச்சிகளை அடக்குவதற்குப் பயன் படுத்தக்கூடும் என்று ஆஸிய ஆபிரிக்க நாடுகள் அஞ்சுகின்றன.

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் வழங்குவதற்கு முன்னர் பிரிட்டன் காமன்வெல்த் நாடுகளோடும் இதர முக்கியஸ்தர்களோடும் விரிவாக ஆலோசனைகள் நடத்தப்படும் என்று பிரிட்டிஷ் பிரதமமந்திரி திரு ஹீத் அண்மையில் ஐ. நா. சபையில் தெரிவித்தார்

தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்பதில் இன ஒதுக்கல் கொள்கை எதுவும் சம்பந்தப்படவில்லை யென்பதை பல நாடுகள் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

மேற்காசியா பற்றி

## பிரிட்டிஷ் பிரதமருடன் குரமிக்கோ ஆலோசனை

நியுயோர்க் அக்.26

சோவியத்யூனியன் வெளிநாட்டமைச்சர் திரு. குரமிக்கோ பிரிட்டிஷ் பிரதமர் திருஹீத்துடனும், வெளிநாட்டமைச்சர் சேர் டக்ளஸ் ஹியூருடனும் லண்டனில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஐ நா.சபை வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் வந்த சோவியத்தின் வெளிநாட்டமைச்சர். பிரிட்டன் பிரதமர், வெளிநாட்டமைச்சர்களுடன் மேற்காசியா, தென்கிழக்காசியாப் பிரச்னைகள் பற்றிப் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. சைபிரஸ் முதல்வர் மகாரியஸ் பாகிஸ்தான் ஜனாதிபதி யாகியாகான், எதியோப்பியப் பிரதமர் ஆகியோருடனும் அவர் பேச்சுவார்த்தைநடத்தினர்.

ஐ அ. குடியரசு வெளிநாட்டமைச்சர்களுடன் மேற்காசியாப் பிரச்னைபற்றி திரு. குரமிக்கோ [illegible] கப் பேச்சு [illegible] நடத்தியதாக [illegible]ரியவருகிறது.

சில்லி நாட்டின்

## ராணுவத் தளபதி மரணம்

சந்தியாக்கோ, அக். 26

சில்லி நாட்டின் ராணுவத் தளபதி இன்று வைத்திய சாலையில்காலமானார். கடந்த மூன்று நாட்களுக்கு முன் சுடப்பட்ட இவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபின் இன்றுகாலமானார். இது சம்பந்தமாக 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் சில்லி நாட்டில் பொதுத்தேர்தல் நடைபெற்று இடதுசாரித்தலைவர் ஒருவரே அங்கு ஜனதிபதியானார், இத்தேர்தல் காலத்திலேயே ராணுவத் தளபதி சுட பட்டார். ராணுவத் தளபதி வலதுசாரி இயக்கத்தைச் சேர்ந்தவர் எனச் சொல்லப்படுகிறது.

இடதுசாரி அரசாங்கத்திற்கு எதிராகச் செயல்படுவதாகக் கருதப்பட்ட 150 ராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

— —

## மூலப் பொருட்கள் பற்றிபூரண ஆய்வு

கோட்டை, திங்கள்

நாட்டின் மூலப்பொருட்கள் குறித்து பூரண ஆய்வு நடாத்துவதற்கு கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது

நாட்டின் கைத்தொழில் மூலப் பொருள்களின் வளம் குறித்து விரிவாக ஆய்வு நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

கைத்தொழில் அமைச்சு இந்த ஆய்வை 9 தேர்வு [illegible] நடாத்தவிருக்கிறது. மேற்படி 9 பிரிவுக்கும் தனித்தனி குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு

## சோவியத்கல்வி நிலையங்களில் இலங்கை மாணவர்கள்

மாஸ்கோ, அச். 26

இந்த வருடத்தில் சோவியத் உயர்தரக் கல்வி நிலையங்கள் கணிசமான அளவு அயல்நாட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டுள்ளன. அல்ஜீரியா, நைஜீரியா, சூடான், இந்தியா மற்றும் நாடுகளிலிருந்து பெருந்தொகையான மாணவர்கள் வந்துள்ளனர், சோவியத் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 25 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. சோவியத் யூனியன் 70 நகரங்களிலுள்ள 400க்குப் கூடுதலான உயர் கல்லூரிகள் 100 நாடுகளின் மாணவர்களுக்குத் தமது கதவுகளை திறந்துவைத்துள்ளன

கல்வி ஆண்டின் ஆரம்பத்துடன் (இது செப்டம்பர் 1ந் திகதியுடன் ஆரம்பித்தது) இலங்கையிலிருந்து 32 மாணவர்கள் வந்தனர். ஏற்கனவே சோவியத் உயர்தரக் கல்வி நிலையங்களில் 250 ஈழத்து மாணவர்கள் கல்வி கற்றுவருகிறார்கள். விசேஷ நடுநிலைப்பாடசாலைகளிலும் மேலும் பலர் கல்விபயில்கிறார்கள் ஈழத்து மாணவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் மாஸ்கோவிலேயே கல்வி கற்கிறார்கள். 100க்கும் கூடுதலானவர்கள் பட்றிஸ் லுமும்பா நட்புறவுப் பல்கலைக்கழகத்தில் உள்ளனர். வளரும் ஆசிய, ஆபிரிக்க தென்னமெரிக்க நாடுகளுக்குத் தேவையான தேசிய நிபுணர்களைப் பயிற்றுவித்து உதவுவதற்காக இந்தப் பல்கலைக்கழகத்தைச் சோவியத் அரசாங்கம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்தது. பொறியியல், வைத்தியத் துறைகளிலேயே கூடுதல் ஈழத்து மாணவர்கள் பயிற்சிபெறுகிறார்கள். விவசாயம், வரலாறு, சட்டம், பொறியியல். பௌதிகவியல், கணிதவியல், இயற்கை விஞ்ஞானத்துறைகளிலும் ஈழத்து மாணவர்களைக் காணலாம்.

நட்புறவுப் பல்கலைக்கழகம் போக, ஈழத்து மாணவர்கள் மாஸ்கோ மின் பொறியியல், யந்திரக்கருவி உபகரண, மோட்டார் நெடுஞ்சாலை-நிர்மாண, வைத்திய, கட்டடக் கலை நிலையங்களில் பயில்கிறார்கள். கட்டடப் பொறியியல் நிலையத்திலும் இலங்கை மாணவர்களைக் காணலாம். லெனின்கிராட் பல்தொழில் நுட்ப, தொழில்நுட்பவியல் நிலையங்களிலும், லிவோவ் பல்தொழில்நுட்பக் கல்லூரியிலும், பக்கு எண்ணெய், ரசாயன நிலையத்திலும் கிரஸ்னோடர் விவசாய நிலையத்திலும் மற்றும் சோவியத் நகரங்களிலுள்ள கல்வி நிலையங்களிலும் ஈழத்து மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

இலங்கையைச் சேர்ந்த 20 வைத்திய நிபுணர்களுக்குத் தாம் தேர்ந்தெடுத்துள்ள துறையில் ஒரு வருட காலத்திற்கு வைத்திய நிலையப் பயிற்சிபெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## சுழிபுரம் கிராமவாசிகளை எக்ஸ்றே படம் பிடித்தனர்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம்கிராமத்தில்முகாமிட்டுள்ள ஒரு வைத்தியக் கோஷ்டியினர் கடந்தமூன்று தினங்களாக சுழிபுரம் சத்தியக்காட்டுச் சந்தைக்கருகாமையில் உள்ள இடத்தில் 746 பேருக்கு மேற்பட்டவர்களை 'எக்ஸ்றே' படம் பிடித்தனர், பிடிக்கப்பட்ட எக்ஸ்றே படங்கள் பரிசோதிக்கப்படுகின்றனவாம். சுழிபுரத்திலுள்ள இருநூறு குடும்பங்கள் இப்பரிசோதனைக்குள்ளாயின,

யாழ்ப்பாணப் பகுதியில் சுழிபுரம் கிராமத்தில் மட்டுமே இப்பரிசோதனைகள் நடைபெறுகின்றன. விசேட எக்ஸ்றே வாகனம் ஒன்றின் மூலம் படம் எடுக்கும் வேலைகள் மிகவும் துரிதமாக

## 3 கூட்டங்களுக்கு வரவில்லையாம்

அம்பன், திங்.

குடத்தனைக் கிராமசபையின் 11-ம் வட்டார அங்கத்தவர் திரு. க. கந்தையா குடத்தனைக் கிராம சபையில் நடைபெற்ற மூன்று கூட்டங்களுக்கு தொடர்ந்து சமூகமளிக்கவில்லை யென குடத்தனைக் கிராம சபைத் தலைவர் திரு. வ. துரையப்பா யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

— —

## பரிசில் பெற்றனர்

சாவகச்சேரி, திங்கள்

மட்டுவில் வடக்கு மாணவர் மோகனதாஸ் நூல் நிலையத்தின் சார்பில் நடைபெற்ற கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் கலந்து பரிசில் பெற்றோர் விபரம் வருமாறு:

பேச்சுப்போட்டி: கீழ்ப் பிரிவு: செல்வி க. மனோரஞ்சிதமலர், செல்வி சி. இரஞ்சினி, செல்வன் க. நடேசகிருஷ்ணன்.

கட்டுரைப் போட்டி மேற் பிரிவு: செல்வன் க. சண்முகலிங்கம், செல்வன் மா. முருகதாஸ், செல்வி சி. சுப்புலட்சுமி.

பேச்சுப்போட்டி மேற் பிரிவு: செல்வன் வே. சுந்தரலிங்கம், செல்வன் க. சண்முகலிங்கம், செல்வி க. நாகேஸ்வரி.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 10-ந் திகதி (27-10-70)

மேஷம்- தொழில்துறையில் போட்டாபோட்டி தலைதூக்கும் முன்னேறுவதற்கான சந்தர்ப்பமொன்று கை நழுவிப்போகலாம்.

ரிஷபம்- விளையாட்டுப் பிள்ளையாக இருக்க விரும்புவீர். உமது விசித்திரப் போக்கு மற்றவர்களுக்கு வேடிக்கையைத்தரலாம

மிதுனம்- செய்தொழிலில் தடைகள் உருவாகும் மேலதிகாரிகளின் கழுகுப் பார்வை உங்கள் பக்கம் திரும்பும்

கடகம்- அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக்கிடைக்கலாம். திரைப்படத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகமளிக்கக் கூடும்.

சிம்மம்- சீறிவரும் கோபம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இதுதான் காரணம்'

முசலி, திங்கள்

''மன்னார் மாவட்டம் பெரும்பாலும் விவசாயத்திலேயே தங்கியுள்ளது ஆனால் எமது நாட்டிலுள்ள விவசாயக் கழகங்கள், விவசாயிகள் நவீன கால விவசாய முறைகளைப் பின்பற்றுமையினால்தான் எமது விவசாய முறையில் நாம் எதிர்பார்த்த அளவு பயன் பெற முடியவில்லை. இதற்குக் காரணம் எமது பிரதேசத்தில் வாழும் விவசாயிகள், மாதர் விவசாயக் கழகங்கள், வாலிபர் விவசாயக் கழகங்கள், நவீன கால விவசாய முறைகளைப் பின்பற்றுமையுமேயாகும்'

இவ்வாறு மன்னார் மாவட்டத்தில் முதல் முதலாகத் திறக்கப்பட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தை மன்னார் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி ஜனாப் எம். சி. எம். முஸ்தபா திறந்து வைத்துப்பேசுகையில் கூறினார்.

இந்த முதல் பயிற்சிக்கு முப்பத்தினான்கு விவசாய விஸ்தரிப்பு சேவையாளரும் பத்து விவசாயப் போதனாசிரியர்களும் சமுகமளித்திருந்தனர் இப் பயிற்சிநிலையம் உயிலங்குளத்தில் திறக்கப்பட்டது.

லி. பாலகிருஷ்ணன் ஆகியோரின் அனுசரணையுடன், அட்வகேட் திரு. எஸ். தம்பித்துரை ஆஜரானார்.

## 'பொலிஸ்காவலை அதிகரிக்கவும்'

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் திருவடிநிலை கடற் கரையோரமாக பொலிஸ் காவல் அதிகரிக்கப்பட வேண்டும்எனக்கோரும் மகஜர் ஒன்றை சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த பலர் கையொப்பமிட்டுப் பொலிஸ் அதிபருக்கு அனுப்பியுள்ளனர்.

## சுழிபுரம் கி. ச. தேர்தல்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிராமசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் அடுத்தமாதம் 9-ம் திகதி கிராம சபை மண்டபத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் என வட பகுதி தேர்தல் அதிகாரியால் அறிவிக்கப்பட்டுள்ளது. கட்டுப் பணம் கட்டுபவர்கள் நவம்பர் மாதம் 4 ம் திகதி சுழிபுரம் கிராம சபை அலுவலகத்தில் பணத்தைச் செலுத்தவேண்டும். இக்கிராமசபை மொத்தம் பதின்மூன்று வட்டாரங்களையுடையது.

ஐ நா. சபை வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் வந்த சோவியத்தின் வெளிநாட்டமைச்சர், பிரிட்டன் பிரதமர், வெளிநாட்டமைச்சர்களுடன் திஞர்;

ஐ அ. குடியரசு வெளிநாட்டமைச்சர்களுடன் மேற்காசியப் பிரச்னைபற்றி திரு. குரோமிக்கோ தனியாகப் பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரியவருகிறது.

# நாடு முன்னேற பெண்கள் முன்னின்று உழைக்கவேண்டும்

— பண்டிதர்

ஊரதீவு, திங்கள்

'தீவுப்பகுப்பெண்கள் ஆதிகாலம் தொட்டே கைப்பணி கைத்தொழில் ஆகியவற்றில் கைதேர்ந்தவர்களாக விளங்குகிறார்கள். யாழ்ப்பாணத் தீபகற்பத்திலே ஜென்படும் கடகம், பெட்டி, பாய்,என்பன எமது மாதர்களாலேதான் உற்பத்தியாக்கப்படுகின்றன என்பதை எண்ணும்போது நான் இறும்பூதடைகிறேன் எந்த நாட்டில் பெண்கள் முன்னணியில் நின்று செயற்படுகிறார்களோ அந்த நாடு, முன்னேற்றத்தின் உச்சியை எட்டிப்பிடித்ததாக வளம் மிக்கதாக, வனப்புமிக்கதாக மிளிருவதை நாம் அறியலாம்.'

தீவுப்பகுதிப் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு கா பொ. இரத்தினம், கரம்பன் மாதர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. கா. பொ. இரத்தினம் எம் பி. தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தீபகத்துப் பெண்களைப் பொறுத்தவரையில் நான் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றேன், தீவுப்பகுதிவிவசாயிகள் பலர் புகையிலையையே பயிரிடுகிறார்கள். இச் செய்கையால் இவர்கள் அதிக இலாபம் பெறமுடியாதிருப்பதை நான் காணக்கூடியதாக இருக்கிறது. கடந்த ஆண்டு பயிர் செய்யப்பட்ட புகையிலை இன்னும் விற்பனை செய்யப்படாது இருப்பதை நான் காணுகின்றேன். இதைவிடுத்து வெண்காயம் மிளகாய்களை பயிரிடுமாறு தமது கணவன்மாருக்கு பெண்கள் அறிவுறுத்தவேண்டும். இதன்மூலம் கூடுந்த லாபத்தை அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

## பஸ்தரிப்புநிலையம்

சங்கானை, திங்கள்

சங்கானை இந்து இளைஞர் சங்கத்தாரின் முயற்சியினால் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மடத்தடி சந்திக்கருகாமையில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது இதனால் நெடுந்தூரம் செல்லும் பிரயாணிகள் பாதுகாப்பாகக் காத்திருப்பதற்கு வசதியேற்பட்டுள்ளது.

## இடமாற்றம்

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறை அரசாங்க கிருஷிக நிலையம் தற்போதிருக்கும் இடத்திலிருந்து பருத்தித்துறை அரசாங்க வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள ஓரிடத்திற்கு மாற்றப்படவிருக்கிறது. இந்த இடம் பருத்தித்துறைப் பகுதிக்கு ஒரு கேந்திர ஸ்தானமாகும்.

# குத்தகைக்கு இருப்பவர்மீது நிர்ப்பந்தம்செய்தால்நடவடிக்கை

## பொலிஸ் அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

பொது மக்கள் மத்தியில் எழுகின்ற பின்வரும் பொதுத் தகராறுகள் சம்பந்தமாக பொலிசார் நடவடிக்கை எடுப்பார்கள் இது சம்பந்தமாக வடபகுதிப் பொலிஸ் அதிபர் எல்லாப் பொலிஸ் நிலையங்களுக்கும் சுற்றறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

**வேலித் தகராறு**

வளவுச் சொந்தக்காரர் அல்லது நீதிமன்ற உத்தரவு மூலம் அனுமதி பெருமல் புதிதாக வேலிகள் போடவோ வேலிகளை அகற்றவோ அல்லது வேலிகளை அழிக்கவோ கூடாது,

**நடைபாதை**

குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு ஒரு பகுதியில்வதியும் மக்களரல் பாவிக்கப்பபட்ட நடைபாதையை எவரும் தடை செய்வதோ அல்லது பதையில்வேலி போடுவதோ அல்லது சம்பந்தப்பட்டவர்களின் அனுமதியின்றி அல்லது நீதிமன்ற உத்தரவின்றி வேலிகளைப் போடுவதோ அனுமதிக்கப்பட மாட்டாது.

**வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும் வீடு அல்லது சொத்து**

ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு தொடர்பாக ஒரு விளவில் அல்லது ஒரு காணியில் குடியிருப்பவரை அல்லது குத்தனகக்கு இருப்பவரை எந்தசூழ் நிலையிலும் எவராவது அலலதுசொந்தக்காரராவது கட்டாயத்தின் பேரில் வெளியேற்ற முடியாது.

இம் மாதிரி விடயங்களில் சொந்தக்காரர் நீதிமன்ற உத்தரவை நாடவேண்டும் குத்தகைக்கு இருப்பவரின் மீது நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தினல் சொந்தக்காரர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**பொதுக் கிணறு பாவித்தல்**

தனிப்பட்ட ஒருவரின் நிலத்திலுள்ள கிணறு ஒன்று பல குடும்பங்கள் பாவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தால் அதனை வேலிகள் போட்டு மதில் நிறுவி அல்லது வேறு விதமாக தடைகளை ஏற்படுத்துவது நீதிமன்ற கட்டளை மீது அல்லது சம்பந்தப்பட்டவர்களின் அனுமதியின்றி அனுமதிக்கப்படமாட்டாது.

தடவையாகும்.

கைத்தொழில் அமைச்சு இந்த ஆய்வை 9 தேர்வு முறையாக நடாத்தவிருக்கிறது. மேற்படி 9 பிரிவுக்கும் தனித்தனி குழு நியமிக்சப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் 6 விஞ்ஞானிகளும் இடம்பெறுகின்றனர்.

## கூட்டுப்பிரார்த்தனை

சுழிபுரம், திங்கள்

'மனித வாழ்வுக்கு கூட்டுப் பிராத்தனை மிகவும் இன்றியமையாத ஓர் சாதனமாகும். ஆண்டவன் அருள் கிடைக்க பிராத்தனை ஒன்றே வழியாகும்' என சுழிபுரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் கூட்டுப் பிராத்தனையை ஆரம்பித்து வைத்துப் பேசிய திரு. க. வாமதேவன் குறிப்பிட்டார். திரு. சு. சுந்தரம் பிள்ளையும் பேசினர்.

ங்களாக சுழிபுரம் சத்தியக்காட்டுச் சந்தைக்கருகாமையில் உள்ள இடத்தில் 746 பேருக்கு மேற்பட்டவர்களை 'எக்ஸ்றே' படம் பிடித்தனர். பிடிக்கப் பட்ட எக்ஸ்றே படங்கள் பரிசோதிக்கப்படுகின்றன. இலங்கையில் முப்பத்தைந்து இடங்களில் இப்படியான பரிசோதனை நடத்தப்பட்டுப் புள்ளிவிபரங்கள் எடுக்கப்

யாழ்ப்பாணப் பகுதியில் சுழிபுரம் கிராமத்தில் மட்டுமே இப்பரிசோதனைகள் நடைபெறுகின்றன. விசேட எக்ஸ்றே வாகனம் ஒன்றின் மூலம் படம் எடுக்கும் வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெறுகின்றன. சுமார் முப்பதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் இவ்வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

'புதிய ஆசிரியர்கள் அனுபவம் பெறும் வரை

# கல்வியைப் பாதுகாக்க இவர்களை நீக்காதீர்'

உடுவில், திங்கள்

மாணவர்களை அறிந்து கல்வியூட்டுவதுடன் வாழ்க்கையில் அவர்களை உயர வைக்கும் பொறுப்பும் கல்வியூட்டும் ஆசிரியர்களுக்குரியது. அனுபவம், ஆற்றல் மிகுந்த ஆசிரியர்களினால் தான் இவற்றைப் பொறுமையுடன் செய்துமுடிக்க முடியும். வேலையில்லாப் பிரனையைத் தீர்க்கவேண்டும் என்பதற்காக வயது முதிர்நத அனுபவம் மிக்க ஆசிரியர்களை இளைப்பாறச் செய்யும் முயற்சி, எதிர்கால சந்ததியைக் கல்வித்தரமற்றவராக்க எடுக்கும் முயற்சியாகவே அமையும். எனவே புதிய ஆசிரியர்களை நியமித்து அவர்கள் அனுபவசாலிகளாகும்வரை சேவையிலுள்ள ஆசிரியர்களை நீக்காது பிள்ளைகளின் கல்வியைப் பாதுகாக்கவேண்டும்'

மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் பாடசாலை அதிபர் திரு வி ஜி சம்பந்தன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் கல்வி அமைச்சுக்கும், மற்றும் கல்வி அதிகாரிகளுக்கும்அனுப்பிவைக்கப்பட்டது.

# தமிழரசுக் கட்சியைத் தோற்கடிக்க கூட்டு முன்னணி?

பருத்தித்துறை, திங்கள்

அடுத்த தேர்தலில் தமிழரசுக் கட்சியைத் தோற்கடிக்கும் நோக்கத்துடன், கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த சில அரசியல் வாதிகளும், அரசியற் கட்சிகளும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணி ஒன்றைத் தோற்றுவிக்க விருப்பதாகத் தெரிகிறது.

கடந்த தேர்தலில் தோல்வியடைந்த ஒரு அரசியல் பிரமுகர் இக் கூட்டு முன்னணிக்குத் தலைமை தாங்க விருப்பதாகவும், வெகுவிரைவில் இக் கூட்டு இயங்க ஆரம்பிக்குமென்றும் நம்பப்படுகிறது. இக் கூட்டு முன்னணியில் தமிழ்க் காங்கிரஸ் சேர்த்துக்கொள்ளப்படுவதுபற்றிக் கருத்து மோதல்கள் இருப்பதாகவும்இவ்விடயம்தற்பொழுது ஆராயப் பட்டுக் கொண்டிருப்பதாகவும் அறியக்கிடக்கிறது. இம்மாதம் 28-ம் திகதி ஆனைப்பந்தியில் நடக்கவிருக்கும் தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்தில் இவ்விடயம் எழுப்பப்படலாமென்றும் தெரிகிறது.

தன் மானத்துடன் வாழ

# 'உறுதியான உள்ளமும் கலங்கா மனோபாவமும் வேண்டும்

— முன்னாள் சபாநாயகர்

பருத்தித்துறை, திங்கள்

'விளையாட்டில் வெற்றி தோல்வியைச் சமமாக ஒரே படியில் வைத்துக் கணிக்கும் உயர்ந்த பண்பு ஒருவனுக்கு ஏற்பட்டால், அவன் தன் வாழ்க்கையில் எவ்வித இடர்களையும் கண்டு விரக்திமனப்பான்மை கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படாது எனவே ஓர் இனம் தன்மானத்துடன் வாழ்ந்து வளர வேண்டுமாயின் வைரமுடைய உள்ளமும், கலங்காத மனோபாவமும் படைத்திருக்க வேண்டுமென்னும் உண்மையைத்தான் உலக வரலாறு நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது'.

இவ்வாறு கரவெட்டி சுடரொளி விளையாட்டுக்கழக ஐந்தாவது ஆண்டுவிழாவுக்குத் தலைமை தாங்கிப்பேசிய முன்னாள் உப சபாநாயகர் திரு மு.சிவசிதம்பரம் கூறினார்.

நெல்லியடிப் பட்டினசபைத்தலைவர் திரு எஸ்.பீ. தேவசகாயம் உட்பட வேறும் பலர் உரையாற்றினர்.

தடகம்- அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக்கிடைக்கலாம். திரைப்படத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகமளிக்கக் கூடும்.

சிம்மம்- சீறிவரும் கோபம் உங்களை நிலைதடுமாறவைக்கும் தானிய நஷ்டத்துக்கும் இடமுண்டு அடக்கம் நன்று

கன்னி- குமுறும் நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள் சிறு விடயத்துக்குக்கூட மற்றவர்கள் குறை கூறுவார்கள்.

துலாம்- பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள். இதன் மூலம் பல செலவாகும். அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்ட தினம்.

விருட்சிகம்- ஆணவப் போக்கு அடிசறுக்க வைக்கும். பின்னணியில் மோசடி வேலை நடைபெறலாம் முன் யோசனையுடன் செயலாற்றுக.

தனுசு- ஆராய்ச்சியாளர்களுக்குப் பொன்னானதினம் அறிவுத்தாகம் மேலிடும். இனபந்துக்களின் கொண்டாட்டமும் இடம்பெறும்.

மகரம்- புதியபாதை ஒன்று உங்களை எதிர்நோக்கியுள்ளது. நீண்டநாள்பிணி இன்று நிவர்த்தியாகலாம்.

கும்பம்- சூழ்ச்சி வலைவிரிக்கும். மனச்சாட்சியின் படி நடந்துகொள்ளவும், மற்றவர்களை நம்பவேண்டாம். தெய்வநம்பிக்கை நன்று.

மீனம்- உவகைதரும் சம்பவங்கள் இடம்பெறும். உறவினர் உங்களை உற்சாகப் படுத்துவார்கள். சிலர் வாழ்க்கையில் காதலும் அரும்பும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# வடமராட்சியில் யு. என். பி. கிளைகள் நிறுவ முயற்சி

பருத்தித்துறை. வெள்ளி

சரவெட்டி சட்டைவேலி உடுப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சில இளைஞர்கள் ஐக்கிய தேசியக்கட்சிக் கிளைகள் வடமராட்சியில் ஆங்காங்கு திறக்க முயற்சித்து வருவதாகத்தெரிகிறது. இவர்களிற் சிலர் யு என். பி. மேலிடத்துடன் தொடர்புகொண்டு அங்கத்துவ மனுப்பத்திரங்கள் நூற்றுக்கணக்காகப் பெற்றுள்ளதுடன் தமது பிரசார வேலைகளுக்காக யு. என். பி. தலைவர்கள் சிலரையும் அழைக்க விருப்பதாகவும் தெரிகிறது. யு. என், பி. தலைவர்களுள் ஒருவரான திரு. எம். டி. எச். ஜயவர்த்தன இவ்விளைஞருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் இவர்களின் முயற்சியை இன்றைய காலகட்டத்திற் பாராட்டாதிருக்கமுடியாதென்றும். வேண்டிய ஒழுங்குகள் செய்தால் தங்களிற் சிலர் வடபகுதிவர எப்பொழுதும் தயாராயிருப்பதாகவும குறிப்பிட்டுள்ளார் இம்முயற்சியில் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள யு. என். பி பிரமுகரின் சேவையைப் பயன்படுத்துமாறும் ஸ்தாபன ரீதியான மாணவர் இயக்கமொன்றை முன்னோடியாக நிறுவுமாறும் கடிதத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனிதன் நாணயமாக உழைத்துவாழ வேண்டியதே தர்மத்தின் அடிப்படையாகும் மந்திரத்தால் எதனையும் செய்துவிட முடியாது. எமக்கு வேண்டிய உணவைக்கூட நாமே உற்பத்திசெய்ய வேண்டும்.

—ராஜேந்திர பிரசாத்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

சௌமிய சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 10 ந் திகதி (27-10-70)

## சோஷலிஸத்துக்கு முதல்படி

அடுத்த நிதி வருடத்தில் அரசாங்கம் எதிர்பார்க்கும் வருமானத்தைவிட அரசாங்கம் செலவிட உத்தேசித்துள்ள தொகை சுமார் 168 கோடி ரூபாய் அதிகமாகும். துண்டு விழும் இத்தொகையை நிதி அமைச்சர் எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்று எதிர்பார்த்த மக்களை அவர் ஏமாற்றிவிடவில்லை. துண்டு விழும் தொகையை அவர் எப்படியோ சரிக்கட்டியிருக்கிறார் எப்படியோ என்று சொல்ல முடியாது. ஒரு சோஷலிஸ சமுதாய அமைப்பை இந்த நாட்டில் உருவாக்குவதற்கு வழிவகுக்கக் கூடிய முதற்படியான நடவடிக்கைகளை நிதி அமைச்சர் மேற்கொண்டிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். சிலருடைய வயிற்றெரிச்சலை அவர் கட்டிக்கொண்டாலும் பலருடைய பாராட்டையும் அவர் தேடிக்கொண்டுள்ளார்.

வரவு - செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் சுமார் 168 கோடி ரூபாவையும் சரிக்கட்டுவதற்கு நிதி அமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா தெரிவித்த யோசனைகளை மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுதே அளவு உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமிடையிலுள்ள இடைவெளியை நிரப்புவதற்கு முயற்சி செய்யப்பட்டிருக்கிறதென்பதை ஒப்புக்கொள்ளச் சிலர் மறுத்தாலும் பதுக்கிவைக்கப்பட்டிருக்கும் பணத்தை வெளியே கொண்டுவருவதற்குச் சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். இப்போது புழக்கத்திலுள்ள நூறு ரூபாய், ஐம்பது ரூபாய் நோட்டுக்களைச் செல்லுபடியாகாமற் செய்ததின் மூலம் பதுக்கப்பட்டுள்ள பெருந்தொகைப் பணம் வெளிவருமென நிதி அமைச்சர் நம்புவது தவருக இருக்க முடியாது. நாற்பது கோடி ரூபாய் வரை பதுக்கப்பட்டி...

...சான்றிதழ்) திட்டம் தளர்த்தப்பட்டிருக்கிறது. ஊழியர் சேமலாப நிதியில் ஊழியரினதும் முதலாளிமாரினதும் பங்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இவை வரவேற்க வேண்டிய நல்ல காரியங்கள்.

தற்காலிக வாசகால பர்மிட்டில் இங்கு வாழ்பவர்கள் ஆண்டுக்கு 500 ரூபாய் விசாவரி செலுத்தவேண்டும். விசாவரி கூட்டரசின் முன்னைய ஆட்சிக் காலத்திலும் விதிக்கப்பட்டது. முன்னர் ஆண்டுக்கு 400 ரூபாயாக இருந்த இந்த வரி இப்போது ஆண்டுக்கு ஐநூறு ரூபாயாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. டி ஆர். பி.க்காரர்களை வர்த்தகம் கைத்தொழில் ஆகிய துறைகளிலிருந்து நீக்கிவிடுவது அரசின் கொள்கையாக இருந்தால் இந்த நாட்டைச் சுரண்ட வசதியற்றவர்களிடம் தான் இந்த விசாவரி அறவிடநேரும். இது நியாயமானதாவென்பது ஆலோசனை செய்யப்படவேண்டிய விஷயம்.

சாதாரண உள்ளூர்த் தபால் கட்டணம் உயரவில்லை ஆனால் தொலைபேசிக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. தொலைபேசிச் சேவை பற்றி நாட்டில் அதிருப்தி நிலவும் இச்சமயத்தில் கட்டணத்தை உயர்த்தியுள்ளது வரவேற்கக் கூடிய விஷயமாகத் தோன்றவில்லை.

மண்ணெண்ணை, டீசல் எண்ணை ஆகியவைகளின் விலைகள் உயரவில்லை. ஆனாலும் பெட்ரோல், சிகரட், பீடி, சுருட்டு ஆகியவைகளின் விலைகள் உயர்ந்துள்ளன. இது நடுத்தர வர்க்கத்தினரைச் சிறிதளவு தாக்கத்தான் செய்யும். வசதிபடைத்தவர்களிடம் குவிந்துள்ள செல்வத்தை எடுத்து நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதுதான் நிதி அமைச்சரின் திட்டமென்றாலும் இவை நடுத்தர...

# ‘திருவாளர் ஸ்டீல்சன்’ இவர் தான் அடையாளம் காண்பவருக்கு பரிசு

## வண்டில் சவாரி, கலை நிகழ்ச்சி, வாண வேடிக்கை, தீபாலங்காரம்

## ‘ஈழநாடு’ ஆதரவில் தீபாவளிப் பெருவிழா



‘திருவாளர் ஸ்டீல்சன்’ இவர்தான்

இவரைத் தெரிகிறதா? இவர்தான் ‘திருவாளர் ஸ்டீல்சன்ஸ்’ தீபாவளித் தினமான 29-10-70-ந்திகதி இவரை நீங்கள் அடையாளம் கண்டீர்களானால் உங்களுக்குத் தீபாவளிப் பரிசாக நூறு ரூபாய் கிடைக்கும். இந்தப் பரிசை வழங்குபவர் ‘ஸ்டீல்சன்ஸ்’ ஸ்தாபன அதிபர் திரு. எம். பூபாலசிங்கம்ஜே பி. ஆவார்.

### என்ன செய்ய வேண்டும்

‘திருவாளர் ஸ்டீல்சன்’ தீபாவளித் தினத்தன்று காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 6 மணிவரை யாழ் நகர வீதிகளிலும் பிற்பகலில் ‘ஈழநாடு’ ஆதரவில் நடைபெறும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடக்கும் யாழ். கோட்டைமைதானத்திலும் நடமாடுவார். ‘திருவாளர் ஸ்டீல்சன்’ ...

...ரூபாய் தீபாவளிப் பரிசு வழங்கப்படும்.

திருவாளர் ஸ்டீல்சனைக் கண்டுபிடிப்பதில் ‘ஈழநாடு’ ஊழியர்களோ அவர்களின் குடும்பத்தினரோ, வடபகுதிப் பொலிஸ் உத்தியோகத்தர்களோ அவர்களது குடும்பத்தினரோ கலந்து கொள்ள முடியாது.

### கோட்டைமைதானத்தில் கலை நிகழ்ச்சிகள்

தீபாவளிக் கலைவிழா நிகழ்ச்சிகள் முன்னர் அறிவிக்கப்பட்டதுபோல் யாழ். திறந்தவெளி அரங்கில் நடைபெறமாட்டாது திறந்தவெளி அரங்கு திருத்தி அமைக்கப்படுவதால் கலைவிழா நிகழ்ச்சிகள் கோட்டைமைதானத்தில் அமைக்கப்படும் விசேஷ அரங்கில் நடைபெறவிருக்கின்றன.

#### நாதஸ்வரம்

நாதஸ்வர கலாநிதி வண்ணார்பண்ணை எம். எஸ். சண்முகநாதன் கோஷ்டியினரின் மங்கள இசையுடன் மாலை 6 மணிககு ஆரம்பமாகும் தீபாவளிக் கலைவிழாவில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் ‘‘மூன்று காதல்’’ என்ற நாடகம் கலாலயா மெல்லிசைக்குழு, இரட்டையர் குழு, கண்ணன் கோஷ்டி ஆகிய ஈழத்தின் தலைசிறந்த மெல்லிசைக் குழுவினரின் இன்னிசைவிருந்துகள் தீபாவளியைத் தித்திக்கச்செய்யும்.

இவைதவிர ... நடிக மன்றத்தினரின் ...

...வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலும் கொடுக்கலாம்.

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி முடிந்ததும் தீபாவளிக்கலை விழா ஆரம்பமாகும் தீபாவளி என்ருல் தீப அலங்காரமில்லாமலா? நிச்சயம் இருக்கிறது தீபாவளி என்ருலேபட்டாசு ஞாபகம் வரும் எனவே கலைவிழா முடிந்ததும் வாணவேடிக்கையும் இருக்கிறது.

யாழ்ப்பாண விளையாட்டு அமைப்புக்குழுவினரால் ஒழுங்கு செய்யப்படும் தீபாவளிப்பெருவிழா வடபகுதிப் பொலிசாரின் ஒத்துழைப்புடன் உங்கள் ‘ஈழநாடு’ பத்திரிகையின் ஆதரவுடன் நடைபெறுகிறதென்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

தீபாவளி விழாவுக்கான ஒழுங்குகளை வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் தலைமையில் ‘ஸ்டீல் சன்ஸ்’ திரு. எம் பூபாலசிங்கம் ஜே. பி. ... இன்டஸ்ட்ரீஸ் திரு. கே. இராஜலிங்கம் ஆகியோரை இணைச்... 

## ‘சமூக ஒற்றுமையே நாட்டின் வளர்ச்சிக்கு வழி’

சங்கானை, திங்கள்

சோஸலிஷ சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தை கொண்டது எமது அரசாங்கம். கிராமங்கள் தோறும் எல்லாப் பாடசாலைகளிலும் சகல வசதிகளையும் அளிக்க நாம் உறுதி கொண்டுள்ளோம். சிங்களவர், தமிழர் ஆகிய இரு சமூகங்களும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த இந் நாட்டுப் பிரஜைகள். இவ்விரு சமூகங்களின் ஒற்றுமையே இந்நாட்டு வளர்ச்சிக்கு அடிகோலும்.

இவ்வாறு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கம் பழையமாணவர் சங்கம் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் உரையாற்றிய உதவிக் கல்வியமைச்சர் திரு பீ. வை. துடாவை குறிப்பிட்டார்.

வடபிராந்தியக் கல்வி அதிகாரி திரு. வி. சங்கரலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது. தொடர்ந்து பேசிய உதவிக் கல்வியமைச்சர் இம் மகாவித்தியாலயத்தின் குறைபாடுகளையிட்டு எனக்கு அளிக்கப்பட்ட மகஜரில் காணப்படும் முக்கிய விடயங்களை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வேன் என்ருர்.

வட்டுக்கோட்டைதொகுதி ...

### உருளைக்கிழங்கு விளைச்சல் அதிகரிப்பு

கிளிநொச்சி, திங்கள்

வடபகுதியில் உருளைக்கிழங்கு உற்பத்தி மேலும் அதிகரித்துள்ளது.

சென்ற வருடத்தைவிட இவ்வருடம் இதுவரை 30 வீதத்தால் உற்பத்தி வீதம் கூடியுள்ளது 1969ம் ஆண்டு சுமார் 8000 அந்தர் விதை உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டது. இவ்வாண்டு இதுவரை 12,000 அந்தர் விதைஉருளைக்கிழங்கு தருவிக்கப்பட்டு உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பன்னிரண்டு விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் பிரிவிலும் வலிகாமப் பகுதியிலேயே அதிக அளவு உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது ‘கினிகே’ ‘ஆர்க்கா’ போன்ற இனக்கிழங்குகள் எமது சுவாத்திய நிலைக்கு மிகமிகப் பொருந்துவதால் விவசாயப் பகுதியினர் இந்த வர்க்க கிழங்குகளை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்கி...

### பொங்கல்

தாவடி. செவ்வாய்.

தாவடி வடக்கு குழந்தை சிட்டி கணையன் வளவு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மகா சங்காபிஷேக பூர்த்தியை முன்னிட்டு இன்று விசேஷ பொங்கல் நடைபெறவுள்ளது.

### தொழில் அமைச்சரை சந்திப்பர்

கொழும்புத்துறை, திங்கள்

வடபகுதிப் பொற்தொழிலாளர்கள் தொழில் அமைச்சரை விரைவில் சந்தித்துத் தமது குறைகளை எடுத்துக் கூறவிருக்கின்றனர். மகஜர் ஒன்றையும் அவர்கள் அமைச்சருக்குக் கையளிப்பர்.

### பொலிஸ் தேடுகிறது

அம்பன், திங்கள்

பருத்தித்துறையிலுள்ள சைக்கிள் கடையொன்றில் வாடகைக்கு சைக்கிள் எடுத்துச் சென்ற ஒருவர் வாடைச் சைக்கிளுடன் மறைந்துவிட்டதாக உரிமையாளர் செய்த புகாரைத் தொடர்ந்து பொலிசார் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

வாடகைச் சைக்கிள் கடை உரிமையாளர் வாடைகைச் சைக்கிள் உரிய காலத்தில் திருப்பிக்கொடுக்கப்படாததால் பருத்தித்துறைப் பொலிஸ் செய்த புகாரைத் தொடர்ந்து பொலிசார் அவரால் கொடுக்கப்பட்ட விலாசத்தின்படி சென்று விசாரித்த பொழுது ஆசாமி பொய்யான பெயரும் விலாசமும் கொடுத்துள்ளாரெனத் தெரிய வந்துள்ளது.

வாடைச் சைக்கிளுடன் கம்பி நீட்டிய ஆசாமி நாகர்கோவில் கரையூரைச் சேர்ந்தவர் என்பது பொலிஸ் விசாரணையின்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகாமற் செய்ததின் மூலம் பதுக்கப்பட்டுள்ள பெருந் தொகைப் பணம் வெளி வருமென நிதி அமைச்சர் நம்புவது தவருக இருக்க முடியாது. நாற்பது கோடி ரூபாய் வரை பதுக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர்கருதுகிருர் பணம் ஒரே இடத்தில் குவிந்திருப்பதும் பதுக்கி முடக்கி வைக்கப்பட்டிருப்பதும் யாருக்கும் நன்மை தர மாட்டாது. இந்தவகையில் பதுக்கப்பட்டிருக்கும் பெருந் தொகைப்பணத்தை வெளிக் கொண்டுவந்து அதை நாட்டுக்குப் பயன்படுத்த எடுக்கப் பட்டிருக்கும் நடவடிக்கை வரவேற்கப்படக்கூடியதே.

சாதாரண ஏழை எளிய மக்களின் வாழ்க்கைக்கு அன்ருடத் தேவையான அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை. சஞ்சிகைகள், பத்திரிகைகள் மீதான 'பீகஸ்' (வெளி நாட்டுச் செலாவணி உரிமைச் ... படைத்தவர்களிடம் குவிந்துள்ள செல்வத்தை எடுத்து நாட்டின் அபிவிருத்திக்குப் பயன் படுத்துவதுதான் நிதி அமைச்சரின் திட்டமென்ருலும் இவை நடுத்தர வர்க்கத்தினரையும் சாதாரண பொதுமக்களையும் சிறிதளவாவது பாதிக்கக்கூடிய முறையில் உயர்மட்டத்திலுள்ளவர்கள் சுமையைத் தட்டிவிடுவதென்று எதிர் பார்க்கலாம்.

திட்டமும் நோக்கமும் நல்லதாக இருந்தாலும் அவற்றை நடைமுறைப் படுத்துவதில் தான் அவை தங்கியிருக்கின்றன. சரியான முறையில் விழிப்புடன் இவற்றைச் செயல் படுத்திஞல் நிதி அமைச்சர் எதிர்பார்க்கும் சோஷலிச அமைப்பு இங்கு மலரும் காலம் அதிக தூரத்திலிருக்கமுடியாது.

நகர வீதிகளிலும் பிற்பகலில் 'ஈழநாடு' ஆதரவில் நடைபெறும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடக்கும் யாழ். கோட்டைமைதானத்திலும் நடமாடுவார். 'திருவாளர் ஸ்டில்சன்' இவர்தான் என்பதை நீங்கள் சரியாக அடையாளம் கண்டுகொண்டால் மட்டும் போதாது. அவரது புகைப் படம் பிரசுரிக்கப்படும் இன்றைய 'ஈழநாடு' பத்திரிகையாவது அல்லது அந்தப் படம் பிரசுரிக்கப்படும் நாளைய 'ஈழநாடு' அல்லது 'ஈழநாடு' வாரமலர் ஆகிய (27, 28, 29-10-70 ஈழநாடு) பத்திரிகைகளில் மூன்று பிரதிகள் (மூன்று பிரதிகளும் ஒரே தினத்தில் வெளிவந்தவையாக இருக்கவேண்டும்) கையில் வைத்திருக்க வேண்டும். 'ஈழநாடு' பத்திரிகைப் பிரதிகளால் 'திருவாளர் 'ஸ்டில்சனின்' தோளில் மெதுவாகத் தடவி நீங்கள்தான் 'திருவாளர் ஸ்டில்சன்' உங்களை அடையாளம் கண்டு கொண்டேன்' என்று தெரிவிக்க வேண்டும்.

நீங்கள் அவரைத்தான் அடையாளம் கண்டுகொண்டீர்களாஞல் அவர் அதை ஒப்புக் கொண்டு அங்கு சமீபத்தில் நிற்கும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடம் அவரை (அடையாளம் கண்டு கொண்டவரை) அழைத்துச் செல்வார். அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் இதைக் குறித்துக் கொண்டு விழா அமைப்பாளர் ஒரிவரிடம் அவரை ஒப்படைப்பார்.

'திருவாளர் ஸ்டில்சனை'க் கண்டுபிடித்தவருக்கு அன்று மாலை நடைபெறும் தீபாவளிக் கலைவிழாவில் நூறு ... இன்னிசைக் குழுவினரின் இன்னிசைவிருந்துகள் தீபாவளியைத் தித்திக்கச்செய்யும்.

இவைதவிர ஆவரங்கால் நாடக மன்றத்தினரின் "கல்லும் கண்ணீரும்" என்ற பாராட்டுப்பெற்ற நாடகமும் இந்நிகழ்ச்சியில் இடம்பெறுகின்றன.

## சவாரிப போட்டிக்கு கட்டணம் 5 ரூபாய்

தீபாவளித் தினத்தன்று பிற்பகல் ஒருமணிக்கு யாழ். கோட்டை மைதானத்தில் ஆரம்பமாகும். மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் இரட்டைத்திருக்கல் வண்டிகளே கலந்துகொள்ளும். 'ஏ', 'பி' பிரிவுகளாக நடைபெறும் இச்சவாரிப் போட்டிகளில் வெற்றி பெறும் 'ஏ' பிரிவு வண்டிலுக்கு 300 ரூபாய்க்குமதிகமான பெறுமதிவாய்ந்த தங்கப்பதக்கமும் 'பி' பிரிவில் வெற்றியீட்டும் வண்டிலுக்கு இருநூறு ரூபாய்க்கு குறையாத பெறுமதி வாய்ந்த தங்கப்பதக்கமும் வழங்கப்படும். இதரபரிசுகளும் வழங்கப்படவிருக்கின்றன.

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிக்கு விண்ணப்பிப்போர் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும். அதற்கான விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி அதனுடன் பிரவேசக் கட்டணமாக ஐந்து ரூபாயும் இணைத்து அனுப்ப வேண்டும். பிரவேசக் கட்டணத்துடன் கூடிய விண்ணப்பப்பத்திரத்தை 'சவாரிப்போட்டி' என்று தலைப்பிட்டு 'ஈழநாடு' காரியாலயத்திலும் திரு எம். பூபாலசிங்கம் ஜே பி 'ஸ்டில்சன்ஸ்' ஸ்ரான்லி ... சுந்தரலிங்கத்தின் தலைமையில் 'ஸ்டீல் சன்ஸ்' திரு. எம் பூபாலசிங்கம் ஜே. பி. யாழ். மெற்றல் இன்டஸ்ரீஸ் திரு.கே. இராஜலிங்கம் ஆகியோரை இணைக்காரியதரிசிகளாகக் கொண்ட குழு கவனித்துவருகிறது யாழ். மாநகரசபைமராமத்துப் பொறியியலாளர் திரு. இ. வைத்திலிங்கம் சமூக சேவைப்பகுதி அதிகாரி திரு என். சிவசிதம்பரம் வெடிமருந்துப் பரிசோதகர் திரு. எம், பொன்னம்பலம் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் திரு. எம். மாணிக்கம் திரு. கார்த்திகேசு திரு. இராஜேஸ்வரன் 'ஈழநாடு' திரு. எஸ். எம். கோபாலரத்தினம் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்

தீபாவளிப் பெருவிழாவின் இதரவிபரங்களுக்கு தொடர்ந்து 'ஈழநாடு' படியுங்கள்.

யாழ்ப்பாணம், செவ்.

இப்போதய அரசாங்கம் கூட்டுறவு முறையைப் புனரமைப்புச் செய்யச் சகல நடவடிக்கைகளையும் மேற் கொண்டுள்ளது இது பற்றி கூட்டுறவுக் கடைகளுக்கும், சமாசங்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இதைத்தொடர்ந்து கூட்டுறவு இலாகாக்களில் வேலை ஸ்தம்பிதம்பட்டுள்ளது. மேலதிக ஆட்கள் எடுக்க முடியாதபடியால் சிப்பந்திகள் அரிசிவிநியோக வேலைகளையே செய்யமுடியாது. கஷ்டப்படுகின்ருர்கள் கூட்டுறவு நிருவாகசபையினராலும் இதுவிடயமாக மேலதிகாரிகளுக்கு முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

(கு வி ம)

... அளிக்கப்பட்ட மகஜரில் காணப்படும் முக்கிய விடயங்களை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வேன் என்ருர்.

வட்டுக்கோட்டைதொகுதி ஆட்சிமன்றஉறுப்பினர் திரு ஆ. தியாகராசா பேசுகையில் பட்டினசபை அந்தஸ்துள்ள இச்சங்கானையில்சிறந்ததொரு மகாவித்தியாலயம் இல்லாதது வருந்தத்தக்கது இங்கு தகுந்த விஞ்ஞானக் கல்வி போதிக்கப் படாமையால் இப்பகுதி மாணவர்கள் பலமைல்கள் தாண்டி வேறுபாடசாலைகளுக்கு பல தரப்பட்டகஸ்டங்களை அனுபவித்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தநிலை ஏற்பட்டுள்ளது. இக்குறைகளை நிவர்த்தி செய்ய என்ஞல் இயன்ற முயற்சிகளை மேற்கொள்வேன் என்ருர்.

கல்லூரி அதிபர் பரம் தில்லைராஜா பேசுகையில் மக்கள் அரசாங்கம் வந்தபின ஆசிரியர் உலகம் தனிப் பாக்கியம் பெற்றுள்ளது. இந் இளைப்பாறிய தலைமை ஆசிரியர்கள் கல்வி அமைச்சில் அதன் தலைமைப்பீடத்தில் இருப்பதால் எமதுபிரச்சினைகள்யாவும் வெகுசீக்கிரத்தில் சுமுகமாகத்தீர்க்கப்படும் என்பது நிச்சயம் ஏகாதிபத்திய ஆட்சியினரின் காலக்கல்விமுறை முற்ருக மாற்றப்பட்டு புதிய சோஷலிசக்கல்வித் திட்டம் உருவாக்கப்படும் என்ருர்.

பழையமாணவர் சங்கக் காரியதரிசி திரு எஸ் ஞான நாயகம் நன்றி கூறினர்.

... கள் எமது சுவாத்திய நிலைக்கு மிகமிகப் பொருந்துவதால் விவசாயப் பகுதியினர் இந்த வர்க்க கிழங்குகளை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

நவீன முறைப்படி விளைவிக்கும் முறைகளை விவசாய உத்தியோகஸ்தர்கள்விவசாயிகளுக்கு விளக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## திருடினர்களாம்

முல்லைத்தீவு, திங்கள்

புதுக்குடியிருப்பு தேவிபுரத்தில் உள்ள இருளன் மாரியாய் என்பவருடைய வீட்டில் ரூபா 745 பெறுமதியான உடமைகளைக் களவாடியதாக அதே இடத்தைச் சேர்ந்து மயில்வாகனம், பொன்னம்பலம், ஆறுமுகம் செல்லையா ஆகிய இருவரையும் சந்தேகத்தின் பேரில் தீவுப் பொலீஸ் இன்ஸ்பெகடர் திரு ஜே வி. பிள்ளைகைதுசெய்துமுல்லைத்தீவு மேலதிக நீதிபதி ஜனுப் ஏ.எம் ஐ சகீட்முன்னிலையில் ஆஜர் செய்தார். சந்தேகநபர்களைப் பிணையில் விடுமாறு புரக்டர் கே ஐயாத்துரை கேட்டதற்கிணங்க, நீதிபதி சந்தேகநபர்களைத் தலா ரூபா 500 பிணையில் செல்ல அனுமதித்தார்.

... தெரிய வந்துள்ளது.

வாடைச் சைக்கிளுடன் கம்பி நீட்டிய ஆசாமி நாகர்கோவில் கரையூரைச் சேர்ந்தவர் என்பது பொலிஸ் விசாரணையின் பின்னர் தெரியவந்துள்ளது. இவரையும் ரூபா 300 பெறுமதியுடைய வாடைச் சைக்கிளையும் பருத்தித்துறைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

உதைபந்தாட்டம்

## சென். பற்றிக்ஸ் சென். ஜோன்ஸ் இன்று மோதுகின்றன

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் ஒரு சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி, இன்று மாலை சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இவ்விரு பிரபல்யமான கல்லூரிகளின் மோதல், கடந்த வருடங்களைக் காட்டிலும், மிகச் சிறப்பாக இந்த வருடம் நடாத்தப்படுகின்றது. இந்தப் போட்டி சம்பந்தமாக, இன்று இந்த ஆட்டம் முடிவடைந்தபின் ரசிகர்களுக்குப் பல பரிசுகளும் வழங்கப்படவிருக்கின்றன. (தே. நி)

## ஸ்கந்தஷஷ்டி எப்போது?

இவ்வாண்டு சாதாரண வருஷம் ஐப்பசி மாசம் 14ம் திகதி (31-10-70) சனிக்கிழமை ஸ்கந்தஷஷ்டி ஆரம்பம் என கொக்குவில் ஸ்ரீ இரகுநாதஐயர் பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது.

மட்டுவில் ஸ்ரீசுப்பிரமணிய ஐயர் பஞ்சாங்கத்தில் முதல் நாள் (30-10-70) வெள்ளிக் கிழமை எனக்குறிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீஇரகுநாதையர் வாக்கியபஞ்சாங்கத்தில் 13-ம் திகதி வெள்ளிக்கிழமை 15 நாளிகை 46 விநாடி (12 மணி 21 நிமி) வரை அமாவாசை இருக்கிறதாகக் குறிப்பிட்டிருக்கிறது. அன்று அமாவாசை வியாபகம் இருப்பதால் ஸ்ந்தஷஷ்டி ஆரம்பிப்பதை நீக்கி மறு நாள் ஆரம்பித்திருக்கிருர்கள் போலும். அப்படியாயின் ஸ்ரீ இரகுநாதையர் சர்வதாரி வருஷ பஞ்சாங்கத்தில் (1948) ஐப்பசி மாசம் 16ம் திகதி திங்கட்கிழமை (1-11-48) அமாவாசை 45 நாளிகை 39 விநாடி (12-20 மணி)வரை வியாபித்திருக்கிறது. அன்று தான் ஸ்கந்தஷஷ்டி ஆரம்பம் எனக் குறிக்கப்பட்டிருக்கிறது

1957 ஏவிளம்பி வருஷம் ஐப்பசி மாசம் 7-ம் திகதி புதன்கிழமை (28-10 57) அமாவாசை 12 நாளிகை 53 விநாடிவரை வியாபித்திருக்க அன்று ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம் குறிக்கப்பட்டிருக்கிறது. 1958 விளம்பி வருஷம் ஐப்பசி மாசம் 26-ம் திகதி (11-11-58) செவ்வாய்க்கிழமை அமாவாசை 16 நாளிகை 56 விநாடிவரை வியாபித்திருக்க அன்று ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம் குறிக்கப்படடிருக்கிறது.

இவ்வாண்டும்அதேமாதிரி அமாவாசை வியாபித்திருப்பதால் அன்று கொள்ளாது மறுநாள் ஆரம்பம் எனக் கொண்டு ஐந்து நாட்கள் அநுஷ்டிக்கும்படி குறித்தது எக்காரணம்பற்றி என்பதை அறிவாற்றல் மிக்க பெரியோர் பத்திரிகை வாயிலாக அறிவிப்பார்களென எதிர் பார்க்கிறேன்.

தி. ச. தியாகராஜ ஐயர்
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சிமன்ற

## தொழிற்சங்கத் தூதுக்குழு

கிளிநொச்சி, திங்கள்

உள்ளூராட்சிமன்றத் தொழிற்சங்கத் தூதுக்குழு இம்மாதம் 30-ம்திகதி உள்ளூராட்சிச் சேவை அதிகார சபைத்தலைவரைக் கொழும்பில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்த உள்ளது, சம்பள முரண்பாடு, சிங்களத் தேர்ச்சி ஆகிய விஷயங்களைப் பற்றிய பேச்சுவார்த்தைக்குச் செல்லும் இத்தூதுக்குழு திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் செல்லவிருக்கிறது.

இப்போட்டியில் பங்குபற்றக் கூடிய தகுதியை நான் அத்தாட்சிப் படுத்துவதுடன், இப்போட்டியில் பங்குபற்றுவதஞல் எனக்கோ எனது உடைமைக்கோ ஏற்படும் காயம் அல்லது சேதங்களுக்கு நானே பொறுப்பாளி என்பதையும் ஏற்றுக்கொள்ளுகிறேன். எனக்கேற்படக் கூடிய காயம் அல்லது நஷ்டத்துக்கு போட்டிநிர்வாகிகளிடமிருந்தோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்தோ அல்லது நியமிக்கப்பட்ட எந்த அதிகாரிகளிடமிருந்தோ எந்தவித நஷ்டஈடும் கோரமாட்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்'

போட்டியாளரின் பெயர் ..............................

பங்குபற்றும் பிரிவு —..............................

விலாசம் ..............................

வயது ..............................

மேற்கூறிய தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

..............—...  ..............................

திகதி  போட்டியாளரின் கையொப்பம்

# ரூபா நோட்டு மாற்றுவதில் ஏமாருதீர்'

## பொலிஸார் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்

அடுத்தமாதம்2-ம் திகதிக்குப்பின் புழக்கத்திலுள்ள 50 ரூபா 100 ரூபா நோட்டுக்கள் செல்லுபடியாகாதென அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று யாழ். நகரில் இந்த நோட்டுக்கள் 'தண்ணிபட்ட பாடாகப்' புழங்கியது. பொதுமக்கள் பலரும் தாம் வைத்திருந்த 50 ரூபா, 100 ரூபா நோட்டுக்களை மாற்றிக் கொள்வதற்கு எல்லா முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தனர். எந்தக் கடைகளிலும் 50ரூபா, 100 ரூபா நோட்டுக்களுடன் மக்கள் காணப்பட்டனர்.

நகைக் கடைகளிலும் ஜவுளிக்கடைகளிலும், மளிகைக் கடைகளிலும் மற்றும் ல்லறைக் கடைகளிலும் பொருட்களை வாங்கிக் கொண்டு ரூபா நோட்டுக்களை மாற்றுவதைற்கு மக்கள் முனைந்தபோதும் பல கடைகளிலும் இந்த நோட்டுக்களை ஏறகக்கடைக்காரர் மறுத்துவிட்டனர். கூட்டுறவு மொத்தவிற்பனவுக் கடையில் 35 ரூபாவுக்கு மேல் துணிவகைகள் வாங்குபவர்களுக்கே நோட்டுக்கள் மாற்றிமிகுதிப்பணம் கொடுக்கப்பட்டது.

சில இடங்களில் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு தரகர்மார் கமிஷன் பெற்றுக்கொண்டு மாற்றிக் கொடுத்ததாகவும் அறியப்படுகிறது.

இன்றிலிருந்து அடுத்த 2-ம் திகதிவரை வங்கியில் 1000 ரூபா வரை 50 ரூபா, 100 ரூபா நோட்டுக்களை மாற்றிக் கொள்ளலாம். அதற்கு அதிகமான தொகைக்கு வங்கியில் உரியவர் தமது பெயரில் கணக்கு வைத்துக்கொள்ளலாம்என்ற நிபந்தனையைத் தொடர்ந்தே நேற்றும் நேற்று முன் தினமும் மூடப்பட்டிருந்த வங்கிகள் இன்று காலையில் திறக்கப்பட்டதும் ஏராளமானவர்கள் நோட்டுக்களுடன் வங்கிக்குப் படையெடுப்பரென எதிர் பார்க்கப்படுகிறது. பண நோட்டுடன் வங்கியில் குவியும் மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு வங்கிகளில் இன்றிலிருந்து போதிய பொலிஸ்பாதுகாப்பளிக்கப்பட்டுள்ளது திருடர்களின் ஆபத்தினின்றும் தரகர்களின் அபாயத்தினின்றும் பொதுமக்களைக் காப்பாற்ற வங்கிகளின் உள்ளேயும் வெளியேயும் பொலிசார் தீவிரமானகண்காணிப்பில் ஈடுபட்டிருப்பர்.

பண நோட்டுக்களை மாற்றும் போது தரகர்களிடம் சிக்காதிருக்குமாறு பொலிசார் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் அதிபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரீ கோவில் மேல வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org